தென்மொழி

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்



தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

.... !!! .... ???

செகப்பிரியர் மில்டனெனும் ஆங்கிலத்துச் சிறந்துயர்ந்த
இலக்கியங்கள் பற்பலவும் தேர்ந்துநாடி
மிகப்படித்து முன்னேறிப் பதவிபெற்று மேனாடும்
கீழ்நாடும் வரவேற்க மேவலுற்றுத்
தகப்பலவும் சீர்பெற்று வாழ்ந்திடினும், திருக்குறளைத்
தீண்டாத - உணராத - தமிழனைப்போய்
மிகப்பெரியன் என்பதிலோர் பெருமையுண்டோ ?
மகிழ்ச்சியுண்டோ ?
தமிழ்க்குலத்திற் கெள்ளளவும் மேன்மையுண்டோ ?

கல்லாத துறையெல்லாம், அறிவியலின் கூறெல்லாம்
கணித்தறிந்து, பட்டம்பெற்று, யார்க்கும் எங்கும்
இல்லாத பெருமையெலாம் புகழெல்லாம் இணைந்துவர
வாழ்ந்திடினும், எந்தமிழின் மெய்ம்மைசான்ற
சொல்லாலும் செயலாலும் தமிழ்ப்பண்பு மேவானை-
விரும்பானை - ஒழுங்கழிந்த தமிழனைப்போய்
வல்லானென் றெவ்வாறு வாய்கூசா துரைத்திடுவேன் ?
வாழ்த்திடுவேன் ? வாழையடி வாழையென்பேன் ?

ஏவலர்கள் கைகட்டி வாய்பொத்தி வரிசையுற
நின்று, வநஞ் சொற்களெல்லாந் தலைமேல்தாங்கி
மேவலுறும் படி, பதவி வாய்த்திடினும் செந்தமிழ்த்தாய்ப்
புரந்திடுவார் தமையறிந்து, மேன்மைசெய்யும்
ஆவலிலான்-மனக்கசண்டை அகற்றலிலான் -ஆன்றதிறம்
அறிதலிலான் ஒருவனைப்போய் அறநூல் ஆய்ந்த
காவலனென் றெங்ஙனம்யான் கழறிடுவேன் ?
போற்றிடுவேன் ?
கனித்தமிழால் வாழ்த்தியு[illegible] களிக்குவேனே ?

சுவடி: 8 ஓலை: 10. விலை 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 234 திட்டம் மிக நன்றாயிருக்கின்றது ஆயின் இருமடி பெருகியுள்ளது. வரவு மிகமிக அகரமுதலி விரிவடையத்தான் செய்யும். சிறப்பாகவும் இருக்கும். இங்கிலாந்திலும் அச்சிடக்கொடுக்கலாம். இருநூற்றுவர் பப்பத்துருபா அனுப்புவரா என்பதுதான் ஐயுறவிற்கிடமானது. அனுப்பினுல் நல்லதுதான். கடுகளவுங் கவலையற்றுப் பணியில் ஆழ்ந்து ஈடுபடலாம். அச்சிற்கு வாராத உலக வழக்குச் சொற்கள் அனைத்தையும் தொகுத்து விடலாம். வேண்டிய பொத்தகங்களையெல்லாம் வாங்கிக் கொள்ளலாம். வெளியிட்டவுடன் உலகப் பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிற்கும் ஒவ்வொருபடி யனுப்பி, உலக முழுதும் தமிழைப் பரப்பி விடலாம். தமிழிற்கு எதிர்காலத்தில் எள்ளளவும் எதிர்ப்பும் கேடுமில்லாவாறு ஆரியத்தை ஆழக் குழி தோண்டிப்] புதைத்துவிடலாம் இறைவனருளால் திட்டம்தான் நிறைவேற வேண்டும் ... ஞா. தேவநேயன், காட்டுப்பாடி விரிவு.

0: 235: திட்டத்தில் இருநூற்றுவர் மட்டுமே சேர்க்கப்பெறுவர் என்பதை யறிந்து கவலையுற்றேன். சேர்கின்ற அளவுக்கு உறுப்பினர்களை மேலும் சேர்த்துக்கொண்டால் திட்டம் விரைவாக முடிவுறுமே. வெளியீட்டுச் செலவுபோக மிகுதியை, நம் மொழியும் நாமும் வாழத் தம்வாழ்வின் நலன்களையெல்லாம் துறந்த அப்பெருந் தகையாளரின் அன்றாட வாழ்க்கைச்செலவுக்கு அளிக்கலாமே.

– க. இராமசாமி–கோவில்பட்டி.

0: 236: திட்டம் கண்டு எல்லையிலா மகிழ்வுற்றனம். எப்பாடு பட்டேனும் இத்திட்டத்தினை நிறைவேற்றி, நம் பெறற்கரிய தந்தையார் உயிருடன் இருக்கும்போழ்தே செ. சொ. பி. பேரகர முதலியைத் தமிழகத்தில் உலவவிட்டுத் தமிழகத்தைப் பற்றிய இருளொளியைப் போக்கப்பாடுபடுங்கள் இஃதன்றி நம் தந்தையாரின் மற்றைய தமிழ்ப்பனுவல்களையும் அன்னாரின் காலத்தே வெளியிட்டுத் தமிழகத்திற்கு அறிவொளி காட்டுங்கள். நந்தம் தென்மொழியினையும் இருகிழமை யிதழாக விரைவில் மாற்றுவது நல்லது.

– பொன்-தங்கவேலன், வெங்காலூர்–15.

0: 237: தமிழுக்காகச் செய்ய வேண்டிய தலையாய பணியாகிய ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி''யைத் தொகுப்பதற்கு அரசு முன்வராமை குறித்து மிகவும் வருத்தப்படுகின்றோம். ஆனால் அரசால் செய்ய முடியாத இப்பணியை முடிப்பதற்குத் தாங்கள் செய்துள்ள ஏற்பாடாகிய இத்திட்டமும் மிகச்சிறந்த ஒரு திட்டமாகும். இதன் வழிதான் அகரமுதலியை வெளியிடமுடியும். அதற்குத் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நன்றி கூறி எங்களது முழு ஒத்துழைப்பையும் இதன் வழி தருகிறோம், என்று உறுதியளிக்கிறோம். – பொன்-மாறன், எழிலசரன் – மதுரை–3.

0: 238: மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாக்க, வெளி

(தொடர்ச்சி 3–ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி: 8 ஓலை: 10.

(சுறவம்.) தி. பி. ௨00௨ - சனவரி. - 1971.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

தேர்தல் விளைவுகள்!

நடந்து முடிந்த தேர்தலில் தமிழகத்தில் தி. மு. கழகம் மிகப் பெரும்பான்மை பெற்று அரசுக் கட்டில் ஏறியிருக்கின்றது. அதுபோலவே நடுவணரசிலும் இந்திரா காந்திக்கு மிகப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. மொத்தத்தில் இந்திய அரசியல் அமைப்பு முன்னினும் கொள்கையளவில் வலுப் பெற்றிருக்கின்றது. தேர்தலின் நடைமுறைகளில் எத்தனையோ குற்றங்குறைகள் கூறப்பெறினும், அதன் முடிவுகள் ஒரு கட்சிக்குப் பெரும் அளவும் அரசியல் வலிவைக் கொடுத்திருக்கின்றன. சுருங்கச் சொன்னால் குடியரசு முறையில் உள்ள இந்நாட்டிற்கு முடியரசின் வலிவை இத்தேர்தல் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிலை, ஓர் அளவில் வரவேற்றற் குரியதாக விருப்பினும், பெரும் அளவில் தனிப்பட்ட

ஓரிருவரின் வல்லாண்மைத் தனத்தை மிகுப்பதற்குப் பயன்பட்டு விடுமோ என்று அஞ்சத்தகுந்ததாகவும் இருக்கின்றது. இது, போகப் போக எந்த அரசியல் அதிகாரத்திற்கும் கட்டுப்படாமல் தனித்தியங்க வல்லதான உயர்நெறி மன்றங்களைக் கூடச் செயலற்றதாக ஆக்கி விடுமோ என்று எண்ணவேண்டி யுள்ளது. அதன் முடிவு அப்படித்தான் இருக்கும் என்றால், அரசியல் நாகரிகத்திற்கே மிகப் பொருந்துவதாகிய குடியரசு அமைப்பு முறையே ஆட்டங் கண்டுவிடும் என்பதில் துளியும் ஐயமிருக்க முடியாது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில், தி. மு. கழகம் வெற்றி பெறுவதைத்தான் நாம் விரும்பினோம். ஆனால் அவ்வெற்றி, பிறிதோர் அரசியல் கட்சியையோ, அதன் இயக்கத்தையோ தகர்த்தெறிவதாக இருந்துவிடக் கூடா தென்பதே நம் கருத்து. குடியரசு அமைப்பில் மாற்றான் கருத்துத்தான் சிதைக்கப்படவேண்டுமே யொழிய, மாற்றானையே சிதைத்துவிடும்படி ஒரு நிலைமை உருவாவதை நடுநிலையாளர் எப்பொழுதும் வரவேற்கமாட்டார். அப்படி ஒரு நிலைமை உருவாவதற்குத்தான் இக்கால் உள்ள அரசியல் அதிகாரங்கள் துணைநிற்குமென்றால், எதிர்கால மக்கள் நலன்கள் நடுநிலை பொருந்தியதாகவும், மீமிசை மாந்த உணர்ச்சிக்கு மக்களை இட்டுச் செல்வதாகவும் அமையும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஒரு கட்சியின் கொள்கைகளை மக்களிடம் எப்படி வலிந்து புகுத்தி விடமுடியாதோ, அப்படியே பிறிதொரு கொள்கையை வலிந்து அழித்து விடவும் முடியாது; அப்படிச் செய்யவும் கூடாது. அரசியல் அரங்கிலோ, அதன் ஒருபடித்தான விளையாட்டு அரங்கிலோ, ஒருவனைத் தோல்வியுறச் செய்வதென்பது வேறு; அவனை அடியோடு அழித்து விடுவதென்பது வேறு. முடிவு அப்படியும் இருக்கலாமென்றால், நம் வெற்றிக்குச் சிறப்பும் இருக்காது; அவன் தோல்விக்கு இழிவும் இருக்காது. விளையாட்டில் நம் கவனம் செல்லவேண்டுமே யல்லாது, எதிர் விளையாட்டுக்காரனை ஏதோ ஒருவகையில் வீழ்த்துவதில் நம் கவனம் செல்லக்கூடாது. தேர்தல் என்பதும் ஓர் அரசியல் விளையாட்டுப் போன்றதுதான். வஞ்சகத்தையும், ஏமாற்றுதலையுமே அடிப்படையாகக் கொண்ட சூதாட்டத்தில் கூட, முறைமாறி ஆடும் ஆட்டத்தை எவரும் ஒப்புக்கொள்வதில்லை. அப்படி ஆடிப்பெறும் வெற்றியைப் பிறர் வரவேற்பதுமில்லை. தோல்வியடைந்தவன் தன் தோல்விக்காகத்தான் வருந்த வேண்டுமே யன்றி, தான் தோற்கடிக்கப்பட்ட முறைகளுக்காக வருந்துவதாக இருப்பது கூடாது. தோல்வி

யுணர்ச்சியால் அவன் நாண வேண்டுமே யன்றி, தோல்வியுற்ற வகைகளால் அவன் பொருமக் கூடாது. வெற்றி பெற்றவன் நடுநிலை உணர்வுள்ளவர்களால் பாராட்டற் குரியவனாக விளங்க வேண்டுமேயல்லாது, பழித்தற் குரியவனாக ஆகிவிடக் கூடாது. எதிரியும் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளும்படி எவன் வெற்றி பெறுகின்றானோ அவனே பாராட்டுக்குரியவன் என்பதை எவரும் மறந்துவிட வேண்டா. வல்லடி வழக்கு என்னும் மரபுக்கு என்றும் நிலைத்த மதிப்பிருப்பதில்லை; வரவேற்பும் இருப்பதில்லை. **இட்லரும், அயூப்கானும்,** இக்கால் பாக்கித்தான் தலைவராகவுள்ள **யாகியாக்கானும்** வல்லடி வழக்கர்கள் என்பதாலேயே உலக அரசியலில் இழிந்த இடங்களைப் பெறுகின்றனர் என்பதை நாகரிக அரசியலை விரும்பும் ஒவ்வொருவம் கவனத்தில் கொள்ளுவது நல்லது. " **அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்; மறத்திற்கும் அஃதே துணை** " என்னும் குறள் நமக்குணர்த்துவதும் அதுவே !

நடுநிலை மரபு பிறழாமல்—பழியுடையதாகக் கருதப்பெறாமல் தி.மு.க. வெற்றி பெற்றிருக்குமானால் நம்மை விட அதனை வரவேற்பவரும் பாராட்டுபவரும் வேறு ஒருவர் இருக்க முடியாது.

புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்

—என்பதே தமிழனின் போராட்டக் கொள்கை. இக்கொள்கைக்கு மாசு வருமாறு ஈட்டப்பெறும் வெற்றி எத்தகையதானாலும், எவ்வளவு நன்மை பயப்பதானாலும், எந்தச் சூழ்நிலையில், எத்தகைய கட்டாயத்தில் அமைந்ததானாலும் நமக்கு அது பெருமையைத் தருவதற்கில்லை; மாறாக இழுக்கையே தருவதாகும். தற்கால அரசியலில் இத்தகைய அறக்கொள்கைகளுக்கு வெற்றி கிட்டாது என்று கூறப்படுமானால் நாம் இப்பொழுதுள்ள அரசியல் அமைப்பையே மாற்றி யமைக்கப் பாடுபடுவதே சிறந்தது. பொய்களையும் போலிகளையும் வெற்றிக்குப் படிக்கட்டுகளாக அமைத்துக் கொள்ளக் கூடாது, அப்படிப் பெற்ற வெற்றிகள் வரலாற்றில் சிறப்பெய்தியதில்லை. தமிழ் மக்களின் வெற்றிக்குப் பாடுபடும் அன்பர்கள் ஒன்றை என்றும் நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். பிராமணீயத்தையும், தமிழக அடிமை நிலைகளையும் நேர்மையாக எதிர்த்துப் போராட வேண்டும் என்னும் கருத்தில் தமிழர்கள் இருந்ததால்தான், கடந்த மூவாயிரமாண்டுகளாக அவர்கள் போராட வேண்டியிருந்தது, நேர்மையற்ற முறைகளில், அஃதாவது அறமல்லாத வழிகளில் அவர்களின்

போராட்டம் இருந்திருக்குமானால் தமிழர்கள் என்றைக்கோ வென்றிருப்பார்கள். ஆனால் அத்தகைய வெற்றி தமிழினத்தின் நிலைத்த புகழை அழித்துக் கட்டிய வெற்றியாகவே இருந்திருக்கும். உலகத்தின் நாகரிக அரசியல் பண்பாட்டில் தமிழனின் அரசியல், குமுகாயப் போராட்டங்கள் என்றும் தலைமையிடம் பெற்றே விளங்குகின்றன என்பதை எவரும் மறந்துவிடவேண்டா. நம்மில் நாமே உயர்ந்தவர்களாகக் கருதிக் கொள்ளும் வரை யாரும் உயர்ந்தவர்களாகக் கருதிவிட மாட்டார்கள். தமிழன் புறநிலையில் எப்படியிருந்தாலும், அவன் அகநிலையில் இன்னும் போதிய முன்னேற்றம் பெறாதிருப்பதாலேயே, அவன் தன் உரிமைகளை முழுவதுமாகப் பெறமுடியாதவனாக இருக்கின்றான் என்பதை ஒவ்வொரு தமிழனும் தன் உள்ளத்தில் ஆழப் பதிய வைத்துக்கொள்ளல் வேண்டும். அஃதாவது தமிழன் தன் உள்ளத்தைப் பொறுத்த மட்டில் இன்னும் கூர்தலற (பரிணாம) வளர்ச்சி எய்துதல் வேண்டும். தமிழன் அக விடுதலை பெறாமல் புற விடுதலை பெறுதல் முடியாது. அக விடுதலை பெற்ற இனங்களுக்கு எடுத்துக்காட்டுக் கூறவேண்டுமானால் சப்பானியரையும், நீகிரோவரையும் குறிப்பிடலாம். தமிழன் தன் இனத்தைத் தானே அழித்தொழிக்கும் ஒருவனாக – தன் இனத்தைத் தானே அடிமைப்படுத்தும் கொடுமைக்காரனாக – இருப்பதால்தான், பிறர் இவனுக்கிட்ட அடிமைத் தளைகளை அறுத்தெறியத் தெரியாத கல்லுளி மங்கானாக இருக்கின்றான், என்பதை இவன் எண்ணிப் பார்த்துக் கொள்வானாக.

மேலும், தி.மு.க.விற்குஅரசியல் அரங்கில் எதிராகவுள்ள பேராயக் கட்சியோ, பிராமணீய (சுதந்திரா, சனசங் போன்ற) கட்சிகளோ என்றும் நாம் வரவேற்கும் படியான கட்சிகளாகிவிட முடியாது. தி. மு. க. வின் வெற்றியை நாம் வரவேற்றாலும் மகிழ்ந்து பெருமைப் பட்டுக் கொள்ளாத நிலைகள் வேறு. பேராயத்தையும், பிராமணீயத்தையும் நாம் வெறுத்துப் புறக்கணிக்கின்ற நிலைகள் வேறு. காமராசப் பேராயம் எப்படி நமக்குகந்ததில்லையோ அப்படியே இந்திராப் பேராயமும் நமக்கு உகந்ததில்லை. பக்தவத்சலம் போன்ற தமிழ்ப் பகைவர்கள் இந்திராப் பேராயத்தில் உள்ளதால் மட்டுமே அவர்களின் வீடணத்தன்மையை நாம் எப்படிப் பாராட்ட முடியாதோ, அப்படியே இந்திராப் பேராயம் தி. மு. க. விற்குத் துணைபோவதால் மட்டுமே அதனை நாம் பாராட்டி விட முடியாது. நம் அரசியல் விரகுக்காக இந்திராப் பேராயத்தைப் பாராட்டுதல் செய்கின்றோம் என்பதுதான் உண்மையானால், அதே அரசியல் விரகுகளுக்காகவே இந்திராப்

பேராயம் ஏன் நம்மைப் பாராட்டிக் கொண்டிருப்பதாகக் கருதிக் கொள்ளக் கூடாது? தமிழர்களுக்கு இந்திராவும் ஒன்றுதான்; இராசாசியும் ஒன்றுதான். இராசாசி எப்படி இந்தியப் பிராமணீயத்திற்கு நம்மை அடிமைப் படுத்த முயல்கின்றாரோ, அப்படியே இந்திரா உருசியப் பிராமணீயத்திற்கு நம்மை அடிமைப்படுத்த முயல்கின்றார். உருசியப் பிராமணீயம் என்று நாம் சொல்வது இங்குள்ள உருசியப் பொதுவுடைமைக் கட்சியினர்க்குப் புரியாததாக இருக்கலாம். ஆனால் காலப்போக்கில் அவர்களும் புரிந்து கொண்டுதான் ஆகல் வேண்டும்.

இறுதியாக நாம் விரும்புவது இன அளவில் உண்மையான தமிழர் முன்னேற்றமும் மொழியளவில் உண்மையான தமிழ் முன்னேற்றமும், அரசியல் அளவில், உண்மையான தமிழக விடுதலையுமே அதற்கு முசாபுர் இரகுமான்கள் போன்றவர்கள் தேவைதான்; ஆனால் அவர்களுக்கு முன் கருத்துப் புரட்சி நடத்தும் உருசோக்களும், மார்க்சுகளும் நமக்குத் தேவை. நமக்குள் நாமே மதித்துக் கொண்டாலொழிய நம்மைப் பிறர் மதிக்கும் அளவில் நாம் உயர முடியாது. அரசியல் அதிகாரங்களில் உள்ளவர்கள்தாம் அதற்கு வழிவகுக்க வேண்டும். அரசியல் புரட்சிக்கு முன் அறிவுப் புரட்சிக்கு நாம் வழிவிட வேண்டும். நாம் அறிவெழுச்சிக்கு நாமே குறுக்குச் சுவராக அமைந்து விடக் கூடாது.

எஃது எவ்வாறாயினும் தி. மு. க. மேலும் ஓர் ஐந்தாண்டுகளுக்கு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்றது. அதுபோல் ஏதோ ஒரு வகையில் பேராயம் படுதோல்வி அடைந்திருக்கின்றது. இவ்வெற்றியும் தோல்வியும் நிலையானவை அல்ல. இந்தத் தேர்தலைப் பொறுத்த மட்டில் இவ்விரண்டு கட்சிகளுமே நாகரிகமாகவும் பண்பாட்டுடனும் நடந்து கொள்ளவில்லை. ஒன்றுக்கு ஒன்று தாழ்ந்து போகாத வகையில் அருவருப்பான சொற்களாலும் விளம்பரங்களாலுமே மக்களைக் குழப்பி வந்தன. ஆரியப் பார்ப்பனரின் ஒட்டு மொத்தமான எதிர்ப்பைத் தி. மு. க. எப்படியோ சமாளித்து விட்டது என்றுதான் கூறுதல் வேண்டும். முடிவு எப்படியானாலும் தேர்தல் விளைவுகள் நிலைத்து விட்டன. இந்நிலைதான் உண்மையான தமிழர்களின் முன்னேற்றத்திற்குரிய நிலை என்று இனம்பிரித்துக் காட்ட முடியாதவாறு வெற்றி தோல்விகள் அமைந்து விட்டதாகவே நாம் கூறமுடியும். எனவே, இரண்டு கட்சிகளும் தத்தமக்கு நேர்ந்த நிலைகளை அடியோடு ஒதுக்கி விட்டு, தமிழக முன்னேற்றத்திலும், தமிழர் முன்னேற்றத்திலும், தமிழ் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டிக் கொள்கின்றோம். பிற நிலைகள் பற்றிப் பின்னர் எழுதுவோம்.

— பெருஞ்சித்திரன்.

'தென்மொழி'த் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ(ஆ) வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி)

1.	வெளியிடும் இடம் :	கடலூர்-1.
2.	காலமுறை:	திங்கள் ஒருமுறை.
3.	அச்சிடுவோர் பெயர்:	மா. தாமரை
	இனம்:	தமிழர்
	முகவரி:	தென்மொழி அச்சகம், கடலூர்-1
4.	வெளியிடுவோர் பெயர்:	திரு. பெருஞ்சித்திரன்.
	இனம்:	தமிழர்.
	முகவரி:	தென்மொழி அச்சகம் கடலூர்-1
5.	ஆசிரியர்பெயர், முகவரி:	திரு. பெருஞ்சித்திரன் கடலூர்-1.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடுசெய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்.	திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—71
கடலூர்-1

—பெருஞ்சித்திரன்,
(ஒப்பம்)

மாணவர்கள், தமிழன்பர்கள் கவனிக்க.

அடிக்கடி பள்ளி, கல்லூரி மாணவர்களிடமிருந்தும் ஆங்காங்குள்ள தமிழன்பர்களிடமிருந்தும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு பழைய படிகள் வேண்டியும், தென்மொழி வெளியீடுகளைக் கேட்டும் மடல்கள் வருகின்றன. சிலர் கடந்த ஏறெட்டு ஆண்டுகளாக வெளிவந்த படிகள் அனைத்தும் கேட்கின்றனர். அவற்றையெல்லாம் தொகுத்து விடுத்து வைப்பதில் பலஇடர்ப்பாடுகளும் மிகுதியான அஞ்சற் செலவும் நேர்கின்றன. பழைய இதழ்கள் பகுதி விலைக்குக் கொடுக்கப்பட்டும், மிகுந்த இடைச் செலவுகளால் அன்பர்கள், குறிப்பாக மாணவர்கள் நலனடைய முடியவில்லை.

எனவே, தென்மொழியிலிருந்து ஒவ்வொரு கிழமையிலும் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் அன்பர்கள் பழைய இதழ்களுடனும், பிறதென்மொழி வெளியீடுகளுடனும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வருவர். தேவையான கல்லூரி மாணவர்கள் முன் கூட்டியே தென்மொழிச் சுற்றுச் செலவின் வரவை அறிய வேண்டின் அலுவலகத்திற்கு எழுதக் கேட்டுக் கொள்கின்றோம்.

—அமைச்சர்.

அனைத்தும் ஆரியமா?

வழக்குரைஞர் – பி. இராமநாதன், க. இ; ச. இ.

('ஆர்யதரங்கிணி'* என்னும் நூலைப் பற்றிய குறிப்பு.)

ஆரியர்களைப் பற்றி அனைத்து நாடுகளையும் சேர்ந்த பல்துறைப் பேரறிஞர்கள் ஏற்றுக்கொண்ட கருத்துகள் பின்வருவன. ஆரியர் தொடக்கத்தில் வாழ்ந்த இடம் தென் உருசியப் பகுதியாகும். ஏறத்தாழ கி. மு. 2000 முதல் அவ்விடத்தை விட்டு அலை அலையாக வெளியேறலாயினர். ஒரு பகுதினர் மேற்கு நோக்கிச் சென்று கிரீசு, இத்தாலி போன்ற ஐரோப்பியப் பகுதிகளில் குடியேறினர். மற்றொரு பகுதியினர் கிழக்கு நோக்கிச் சென்று மேற்கு ஆசியாவை ஒட்டிய பாரசீகம் முதலிய பகுதிகளில் தங்கினர். அவ்வாறு கிழக்கு நோக்கிச் சென்றவர்களில் ஒரு பிரிவினரே ஏறத்தாழ கி.மு. 1500-இல் இந்தியாவுக்குள் புகுந்தனர். ஆரியர் வேதங்களில் மிகப் பழையதான இரிக் வேதம் கி. மு. 500 வாக்கில் தொகுக்கப்பெற்றது. எனினும் அதில் ஆரியர் இந்தியாவிற்குள் நுழைந்தகாலச் செய்திகளைக் குறிப்பிடுவனவும் கி. மு, 1200 வாக்கில் இயற்றப்பெற்றனவும் ஆன பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்தியாவிற்குள் நுழைந்த பின் சில நூற்றுண்டுகள் கழித்துத்தான் அவர்கள் பஞ்சாபை விட்டுக் கங்கைச் சமவெளிப் பகுதியில் பரவினர். ஆனல் ஆரியர் பஞ்சாபில் மட்டும்குடியேறியிருந்த தொடக்கக் காலத்திலேயே திராவிட (தமிழ்)ச் சொற்கள் சில அவர்கள் மொழியில் சேர்த்துக்கொள்ளப்பட்டன என்பது இரிக் வேத சமசுகிருதத்திலிருந்து தெரியவருகிறது. ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்தபின் ஏறத்தாழ 1500 ஆண்டுகள் வரை திராவிடச் சொற்களும், ஏன் சில திராவிட இலக்கண இயல்புகளும் கூட சமசுகிருதத்தில் தாராளமாகச் சேர்க்கபட்டுவந்தன. **

---

* "Aryatarangini"- 'The saga of tha Indo-Aryans' by A. Kalyanaraman; Asia Publishing House, Bombay, 1969. Volume 1:-page viii, 466, (vi), 3,xxxv, Gamps and 9 plates. Price: Rs. 40.

** Burrow (1955): "The Sanskrit Language", London Faber and Faber; Murray B. Emeneau: "India as a Linguistic Area" published in 'Language' 1956, Vol No. 32 pages 3-16.

2. இவ்வாறு வேற்றுநாடு புகுந்த ஆரியர் காட்டு விலங்காண்டி நிலையிலேயே இருந்தனர். அவர்கள் புகுந்த நாடுகளில் இருந்த நாகரிகங்களை அவர்கள் வன்முறையால் அழித்தனர். பின்னர் படிப்படியாக உள்நாட்டுக் குடிகளிடமிருந்து நாகரிகங்களைக் கற்றுக்கொண்டனர். இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியக் காட்டு விலங்காண்டிகள் சிந்துவெளியில் சிறப்புற்று விளங்கிய திராவிட நாகரிகத்தைத் தாக்கி அழித்தனர். "கி. மு. 1000த்திற்கு முந்திய இந்தியா" என்னும் நூலில் இசுடுவார்ட் பிக்கட் கூறுவது போல், சீராக நெடுநாள் அமைந்து விளங்கிய எழுதப் படிக்கத் தெரிந்த மக்களைக் கொண்ட பல நகரங்களை உடையதாகிய ஒரு சிறந்த நாகரிகம் விளங்கிய பகுதியில் ஆரியர் காட்டு விலங்காண்டிகளாகவே நுழைந்தனர்... ஆரியப் போர்த்தலைவன் ஒருவனைப் போலவே இந்திரன் படைக்கப்பட்டுள்ளான்... அவன் பெருந்தீனி விரும்புவன். ஆ, காளை மாட்டு ஊனையும் பிற உணவு வகைகளையும் குவியல் குவியலாக விழுங்கிப் பின் சோம முதலிய குடிவகைகளை அருந்துபவன். "மாந்தர்குல வரலாறு" என்னும் நூலில் சாலியோனுர்டு உல்லி கூறுவதுபோல "பண்டை உலகத்தில் விளங்கிய தலைசிறந்த நாகரிகங்களில் ஒன்றை ஆரியக் காட்டுமிராண்டிகள் அழித்தொழித்ததைப் பாராட்டும் நூலே இரிக் வேதம் ஆகும்." இவ்வாறே மேற்கு ஆசியா முதலிய பகுதிகளில் விளங்கிய ஆரியரல்லாதோர் நாகரிகங்களும் ஆரியக் காட்டுமிராண்டிகளால் அழித்தொழிக்கப்பட்டன.

Stuart Piggott: "Prehistoric India to 1000 B. C." Caseell-London 1962 page 259: " .. theAryan advent in India was in fact the arrival of barbarians into a region already highly organised into an empire based on long established tradition of literate urban cultures."

page 262: (Indra) is the apotheosis of the Aryan battle leader ... his appetite is enormous and he debours prodigious quantities of beef, porridge and cakes, swilling them down with the intoxicating Soma or mead"

Sir Leonard Woolley in "History of Mankind, cultural and Scientific Development" vol-I—" Prehistory and beginnings of civilisation" edited by Taoquetta Hawkes & Sir. L.Wolley (Allen & Unvin London 1963) Page 389:- "The Rig veda is the epic of the destruction of one of the great culturtes of the ancient world"

3. ஆயினும் மேற்கண்ட வரலாற்றுண்மைகளுக்கு நேர் எதிரான கருத்தை வலியுறுத்தி திரு. அ. கல்யாணராமன் என்பவர் "ஆரியதரங்கிணி" என்னும் நூல் ஒன்று எழுதியுள்ளார். அது 1969-ஆம் ஆண்டு ஆசியப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்றது. காஞ்சி காமகோடி மடத்தலைவருக்குப் படைக்கப்பட்டுப் பண்டாரகர் ச. இராதாகிருட்டிணன் முன்னுரையுடன் வெளிவந்துள்ள அந்நூலில் ஆரியர் வேறு எங்கிருந்தும் இந்தியாவிற்குள் நுழையவில்லை என்றும் அவர்கள் தொன்றுதொட்டு ஏழு பேராறுகள் பாயும் "சப்தசிந்து" வட்டாரத்தில் (அதாவது தற்காலம், சிந்து, பஞ்சாப், ஆப்கானித்தான், கிழக்குப் பாரசீகம், காசுமீர் ஆகிய பகுதிகள் உள்ள இடத்தில்) வாழ்ந்து வந்தனர் என்றும், முன்னாள் மாநிலக் கணக்காய்வாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு. கல்யாணராமன் கூறியுள்ளார். சப்த சிந்து பகுதியிலிருந்தே ஆ ரி ய ர் இந்தியாவின் பிறபகுதிகளுக்கும் பிற வேற்று நாடுகளுக்கும் பரவினர் என்கிறார் அவர். இக் கருத்தைக் கூறுவதற்கு ஏற்றவாறு, (மொழிநூல், மற்றும் பிற அறிவியல் துறை அறிஞர்கள் அனைவரும் ஆரிய வேதங்களின் காலம் குறித்துக் கொண்ட கருத்துகளுக்கு மாறாக)* வேதங்கள் முதலியவற்றின் காலத்தை (நடுநிலை ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொள்ள மறுத்த பர். பி. வி. கானே முதலிய ஆரியப் பற்றாளர் கருத்துகளைப்பின்பற்றிப்)பின்வருமாறு வரையறுத்துக் கொள்கிறார்:-

	கி. மு.
இரிக் வேதம்	5,000 — 4,000
யசுர் ”	4,000 — 3,000
பிராமணங்கள்	3,000 — 2,000
முதன்மை உபநிடதங்கள்	1,500 — 1,000

மேற்சொன்ன காலவரையறையை அடிப்படையாகக் கொண்டும் பலவிடங்களில் தம் மனம் போல் வலிந்து புகுத்திய பெயர் ஒப்புமை கருத்து ஒப்புமை ஆகியவற்றைக் காட்டியும் ஆசிரியர் மேற்கொள்ளும்

* "The comparative method for reconstruction in Linguistics" by Paul Thieme reprinted at pages 612-13 of "Language in Culture and Society — A reader in Linguistics and Anthropology" edited by Dell Hymes. Harper and Row; New York 1964.

முடிவுகள் சிலவற்றைக் குறிப்போம்:-சப்தசிந்துவிலிருந்துகுடியேறிய ஆரியரே எகிப்து நாகரிகத்திற்குப் பெருமளவுக்குக் காரணமாயினர். பினிசியர்கள் (Phoeneciaus) ஆரியரில் ஒரு பிரிவினரான பானிகளே (Panis), சுமேரியா, கல்தேயா நாகரிகங்களும் ஆரியப் படைப்புகளே. இந்தியாவிலிருந்து பாரசீகம் சென்ற ஆரியரில் ஒரு பிரிவினரே பின்னர் இத்தாலி, கிரீசு முதலிய நாடுகளில் குடியேறினர். பிறிதொரு பிரிவினர் லித்துவேனியாவில் குடியேறினர். வேறு ஆரியக் குடியேற்ற நாடுகளுக்கும் சப்தசிந்து பகுதியிலிருந்தே ஆரியர் குடியேறினர். கி. மு. 1800 முதல் கி. மு. 1200 வரை இருந்த கிட்டைட் அல்லது கெட்டா (Hittite அல்லது Kheta) நாகரிகம் இந்தியாவிலிருந்து குடியேறிச்சென்ற ஆரியர் படைப்பு. மிட்டானியரும் (Mittani அல்லது Mithrani) அவ்வாறு குடியேறிச் சென்றவர்களே. இவ்வாறு ஆரியர் சப்தசிந்துவிலிருந்து வேற்று நாடுகளுக்குக் குடியேறிய காலம் கி. மு. 2000 முதல் ஆகும். இந்நூலின் 2 முதல் 6 இயல்களில் மேற்சொன்னவாறு சப்தசிந்துவிலிருந்து வேற்று நாடுகளுக்கும் ஆரியர் சென்றார்கள் என்றும், அவ்வந்நாடுகளின் நாகரிக, வரலாற்றுச் சிறப்புகள் அனைத்தும் ஆரியர் படைப்பு என்றும் முடிவு கூறுகிறார். இந்நூலின் 1, 7 இயல்களில் ஆரியர் வரலாறு குறித்த பொதுக்கருத்துகளைக் கூறுகிறார். இந்நூலில் இரண்டாம் பகுதி இன்னும் வெளிவரவில்லை. அப்பகுதியில் பசிபிக் தீவுகள், அமெரிக்கக் கண்டங்கள் ஆகியவற்றின் பண்டைப் பண்பாட்டிற்கு ஆரியரே காரணம் என்றும், அந்நாடுகளுக்குக் கிறித்துப்பிறப்புக் காலத்தையொட்டித் திரளான ஆரியர் கடல் வழிக் குடியேறிச் சென்றனர் என்றும் நிறுவப்போகிறாராம்!

4. ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்தபோது அவர்கள் மொழிக்கு எழுத்து இல்லை என்பது வரலாற்றறிஞர் ஏற்றுக் கொண்ட முடிவு ஆகும். *ஆனால் இந்நூலாசிரியரே எழுத்தை முதலில் கண்டு பிடித்தவர்கள் ஆரியர்களே என்றும், ஏறத்தாழ கி மு.2500-இல் எழுத்தைக் கண்டு பிடித்தனர் என்றும் கூறுகிறார். தம் கூற்றுக்கு ஏதுவாக இவர் சிந்து வெளி நாகரிகம் ஆரியர் படைப்பே என்றும் மொகஞ்சோதாரோ, ஆரப்பா போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சி

* "The complete absence of any word connected with writing in Rig Veda despite its size and the many contexts in which such words might be expected to occur is almost certain proof that the Aryans were illiterate" -A.L. Basham "The glory that was India" page 33 (Sidgwick and Jackson 1954)

யில் கண்டு பிடிக்கப்பட்ட முத்திரைகளில் உள்ள மொழி சம்சுகிருதமே என்று வழக்காடுகிறார். (இந்நூலின் 8-ம் இயல் காண்க) இவ்வாறு கூறுவதற்கு இவர் வகுத்துக் கொண்ட காலவரையறை (மேலே 3-ஆம் பததியைக் காண்க) உதவுமாயினும் பிற வரலாற்றுச் சான்றுகள் எவையும் சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையது எனக் கூறத் துணையாக மாட்டா. அண்மையில் சிந்துவெளி நாகரிக முத்திரைகளில் உள்ள மொழி திராவிடமே என்று காண்டிநேவிய அறிஞர் அசுகோ பர்போலா நிறுவியுள்ளது பெரும்பாலான அறிஞர்களால் ஏற்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

5. இந்நூலின் 9-ஆம் இயலில் ஆரியப் போர்மறவர்கள் போர் முறைகள் ஆகியவற்றைப் பற்றி மகாபாரதம், அர்த்த சாத்திரம் முதலிய நூல்கள் கூறும் கருத்துகள் சுருங்கக் கூறப்படுகின்றன. கடைசி இயலாகிய 10-இல் ''அறிவிடலுக்கும் கலேக்கும் ஆரியர்களின் தொண்டு'' என்னும் தலைப்பில் இந்தியா விளைவுகள் (அஃதாவது ஆரியம், திராவிடம் ஆகிய இருபெரும் பண்பாடுகளில் இதற்குரியது இது என்று இன்னும் அறிஞர்கள் பகுத்துக் கூறிடாத விளைவுகள்) அனைத்தையும் ஆரியத்தின் மேலேற்றிக் கூறுகிறார்.

6. இந்திய வரலாற்றில், நாகரிகத்தில் திராவிடர் பங்கு குறித்து ஆசிரியர் வெளிப்படையாக எங்கும் குறிப்பிடவில்லை. எனினும் ஆரியர் சப்தசிந்து பகுதியிலிருந்து (ஆசிரியர் தாம் ஆரியர் வேற்று நாட்டிலிருந்து புகுந்தவர் என்னும் வரலாற்று முடிவை மறுப்பவராயிற்றே!) இந்தியாவின் பிற பகுதிகளில் பரவுவதற்கு முன் திராவிடர் நாகரிகமற்றவர்கள் என்பதும், ஆரியர் ஊடுருவலுக்குப்பின் இந்திய மண்ணிலும், அங்கிருந்து வெளி நாடு சென்றோரால் பிற நாடுகளிலும்) நடைபெற்ற சிறப்புமிகு நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் ஆரியரால் – அல்லது ஆரியக் குருதிக் கலப்பு அடைந்தவர்களால் நிகழ்ந்தன என்பதும் ஆசிரியர் கூறுது கூறும் கருத்து என்பது அவர் நூலின் பின்வரும் பகுதிகளிலிருந்து தெரியலாம்:- பக்கம் 14: ''கி. மு 3 அல்லது 4-ம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியம் பாணினியை அடியொற்றியது ... திருக்குறளில் பெரும்பகுதி வடமொழி நூல்களின் தழுவல்'. பக்கம் 51:- ''தொல்காப்பியர் வட இந்தியர். ஆரியர் பெரும்பாலும் கி. மு. 1400 இல் தென்னாடு புகுந்தனர் – அகத்தியர் கதைகள் குறிப்பிடுவது போல கி.மு 5-ஆம் நூற்றாண்டுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆரியர் தென்னாட்டிற் புகுந்து, தென்னாட்டினர் மொழிகளைக் கற்று அம்மொழிகளில் நூல் செய்து தமிழுக்கு உருக்கொடுத்து, அதனைப் பண்படுத்தியிருக்க வேண்டும். தொல்காப்பியம் பொருளதிகாரம் சூத்திரம் 143 ''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப'' என்பதில் வரும் 'ஐயர்' ஆரியரைக்

குறிப்பதே. பக்கம் 228:- ''தற்காலத் தமிழில் பெரும் விழுக்காட்டுச் சொற்கள் சம்சுகிருதத்திடமிருந்து பெறப்பட்டவை. தமிழ் இலக்கணமும் அமைப்பும் பெரும்பகுதி சம்சுகிருதத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டவை.''

7. அனைத்துலகப் பல்துறைப் பேரறிஞர் குழாத்தில் இடம் பெற்றிராத இந்நூலாசிரியர் போன்றோர் கருத்துகளுக்கு மறுப்பு வெளியிடுதல் தேவையற்றது எனினும் ஓரளவு புகழ்பெற்ற வெளியீட்டகம் - ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள இந்நூற் கருத்துகளைத் தமிழர் தெரிந்து கொள்ளுதற்காகவே இக் கட்டுரை எழுதப்பெற்றது. இந்நூலாசிரியர் மட்டுமன்றித் திரு.நீலகண்ட சாத்திரிபோன்ற வேறு பல ஆரியப் பற்றுளர் இல்லாத பெருமைகளை ஆரியத்திற்கும் ஆரியர்க்கும் ஏற்றிக்கூறிவரும் போக்கைத் தமிழ் அறிஞர் உணர்ந்து தமிழ் இனத்திற்கு, திராவிடர் இனத்திற்கு உரிய ஆனால் ஆரியப் பற்றுளர் சூழ்ச்சியினால் மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட உண்மைகளை அறிஞர் உலகத்திற்கு மட்டுமின்றித் தமிழ்ப்பெருங்குடி மக்களிடமும் பரப்பி வருதலின் இன்றியமையாமையை உணர்த்துதற்கே இஃது எழுதப் பெற்றது. தமிழருள்ளும் அரசு அலுவல் முதலியவற்றில் இருந்து ஓய்வு பெற்றோரும் பிறரும் ஆக ஓரளவு தமிழ் அறிவும் பிறரால் அறிவும் பெற்றோர் அனைவரும் பெரும்பாலும் சற்றும் இனவுணர்ச்சி இன்றி ஆரிய நஞ்சினைத் தமிகத்தில் பரப்பும் கம்ப இராமாயணம் போன்ற நூலாராய்ச்சிகளிலும் பிற வகையான ஆரிய அடிவருடி வேலைகளிலுமே ஈடுபட்டிருப்பது, தமிழரின் கெட்ட வாய்ப்பேயாகும். 0

தென்மொழி - ஓர் அறிக்கை.

தென்மொழியில் ஏறத்தாழ நான்காண்டுக் காலமாக, அச்சுக் கோப்பாளராகத் திறம்படப் பணியாற்றிய திரு. கோவிந்தசாமி அவர்கள் இவ்விதழ்ப் பணிகளுக்கிடையிலேயே திடுமெனக் காலமாகி விட்டமையாலும், மேற்கொண்டு தகுதியும் திறமையும் வாய்ந்த கோப்பாளர் ஒருவரைத் தேடி அமர்த்தும் முயற்சியில் ஈடுபட்டதாலும், இயல்பான பிற இடர்ப்பாடுகளாலும் இவ்விதழ் மிகவும் காலந்தாழ்ந்து வருகின்றது. அன்பர்கள் பொறுத்துக் கொள்க

— அமைச்சர்

திருக்குறள் பெருமாள்.

-பெருஞ்சித்திரன்.

துருவுந் தூசியும் துவைந்த புழுதியும்
எருவுஞ் சேறும் இறுகக் காய்ந்தே,
உருளை ஓரத்தும், உட்புற அச்சிலும்,
இருகால் மிதியிலும், கம்பிகள் இடுக்கிலும்,
அடையடை யாக அப்பிக் கிடந்து,
கடகடத் தாடுங் கற்கா லத்துக்
கட்டை வண்டிபோல் காட்சி யளிக்கும்
குட்டை யான மிதிவண்டிக் கூடு.

அமரும் இருக்கையில் ஆயிரம் கிழிசல்!
சுமைகள் வைத்திடுஞ் சுமப்பான் 'தொட!' 'தொட!'
கால்மிதிக் கட்டைகள் கழன்று கழன்று
சாலையில் ஆளைச் சாய்த்திடும் நாடகம்!



கிழிசல் வேட்டி ஓரத்தைச் சுருட்டி
மைசேர் பற்களால் மென்று குதப்பி
ஆளைத் தள்ளும் 'அழகிய' தொடரி!
ஏனிவ் விரைவென இடையிடை மடங்கி
ஊன்றிக் கொள்ளும் ஒற்றைக்கால் தாங்கி!
கணகணக் காத கருந்தலைப் பருமணி!
தொணதொணக் கின்ற தொடரிச் சக்கரம்!
உராய்ந்து கிரீச்சிடும் நெளிந்த உருளைகள்!
மரமரக் கின்ற மண்பொதி தடைகள்!

இத்தகு பெருமையோ டெவ்விடத் தாகிலும்
தத்தட தடவெனும் மிதிவண்டி ஒன்று
சாய்ந்த நிலையில் சாலையோ ரத்துக்
காய்ந்த உடலொடு காண்பீ ராயின்
அந்த வண்டிதான் திருக்குறள் பெருமாள்
சொந்த வண்டி—எனச் சொல்லுக துணிந்தே!

அந்த வண்டிக்கு அண்மையில் உள்ள
சந்திலோ பொந்திலோ சாலைக் கடையிலோ
எங்கோ தான்அவர் இருந்திடல் வேண்டும்!

இங்கவர் தோற்றம் எப்படி என்றால்,
இயம்பிடு கின்றேன்; மனத்தில் இறுத்துக;
நயம்படும் அவர்புகழ் நாற்புறம் நாட்டுக!

கோணியில் தைத்த குப்பா யம்போல்
சாணி நிறத்தினில் தொளதொள சட்டை!
ஏறியும் இறங்கியும் ஏழெட்டுக் கிழிசலால்
மாறியும் மடிந்தும் தொங்கிடும் வேட்டி!
உழைப்பின் மிகுதியால் ஓதந் தாக்கிடும்
தலைப்புறம் மறைக்குமோர் தலைமுண் டாசு!
முண்டாசின் உட்புறம் கறுப்பும் வெளுப்புமாய்
உண்டு,இல்லை எனுமா றுரைக்குந் தலைமயிர்!
மொச்சைக் கொட்டைபோல் இருந்த பல்லெலாம்
பச்சுப் பச்சென விழுந்திட்ட பைவாய்!
வாய்மிசை மருங்கிலும் முகவாய்ப் புறத்திலும்
தோய்ந்த வெண்மயிர் துளிர்த்த ஒளிமுகம்!
தளர்ந்த மேனி; தளராத வீறு!
கிளர்ந்த நகைமுகம்; கிறக்கிடும் உரைத்திறன்!
உருக்குலைந் திட்ட உடல்தான் என்னினும்
கருக்குலை யாத கழகத் தமிழ், அவர்!

சாறு பிழிந்த சக்கைதான் எனினும்
வீறு குறையாத் தீந்தமிழ் வேங்கை!

பாரதி தாசனார் பாடல்கள் முற்றும்
ஊரதி ரும்படி உணர முழக்கித்
தெருத்தெரு வாகத் திண்ணை திண்ணையாய்த்
திருக்குறள் பயிற்றிடும் திறல்மிகு ஆசான்!
அலைவுறும் விழிகளால் அள்ளி விழுங்கி
உலைப்பட் டடைபோல் உருப்பல சமைக்கும்
அங்காந்த நெஞ்சம்! அயர்விலா விளைவு!
மங்காத உணர்வு! மலையாத துணிவு!
'உருவுகண் டெள்ளாமை வேண்டும்' என் குறட்கே
ஒருதனி உருவமாய் உலவுந் திருக்குறள்!

சட்டைப் பையினுள் கைவிட் டெடுத்தால்
கற்றைப் பழந்தாள்; கணக்கிலாக் குறிப்புகள்!
கடைக்குறிப் பன்று! காலங் காலமாய்
இடையிடைக் கேட்டவை, எண்ணத் தெழுந்தவை,
பாக்களின் அடிகள், பற்பல கருத்துகள்,
நீக்கமற் றவரின் நினைவினில் தோய்ந்த
குறட்பா விளக்கம்-எனுந்தாட் குவியல்!
வரவும் செலவும் சட்டைக்கு வாரா.
கைப்பிடி அறுந்து தொளையிட்டு முடிந்த
பையொன்று கையில்; அதனுள் பலபடி!

மூர்த்திக் குப்பம் எனும்மூ தூரின்
சீர்த்திக் கிவருடைச் சிறப்பைக் கூறலாம்!

அஞ்சற் காரராய் ஆற்றும் பணியுடன்
எஞ்சும் பொழுதெலாம் எந்தமிழ்த் தொண்டராய்
உலாவரு கின்றார்; ஊரவர் இவர்பால்
பலாப்பழத் தீக்களாய்ப் பறப்பதைப் பார்க்கலாம்!

மடல்கள் கொடுப்பார்; மக்களைக் கண்டால்
சடக்கென இறங்குவார்; சாலையென் றாலும்,
சிற்றுண்டி, தேநீர்ச் சிறுகடை யெனினும்,
வெற்றிலை பாக்கு விற்பவர் என்னினும்,
அவலிடிக் கின்ற ஆயாள் எனினும்,
துவளாத நெஞ்சொடு துணிந்து, ஆங் கிறங்கி,

நலங்கேட் பதுபோல் நாலைந்து குறட்பா
வலிந்து புகுத்தித், தமிழ்வர லாறு,
'படிபடி' என்னும் பாவேந்தர் பாடல்,
அடிதொறும் எதுகை அடுக்கி வரும், அவர்

‘சத்தி முத்தப் புலவ’ரின் பாட்டுள்
ஒத்த நிகழ்ச்சிக் கோரிரண் டடிகள்
நொண்டி யடிப்பது போல்சில நொடிகள்
வண்டியை ஒருகையில் பிடித்த வாறே
கொட்டி விட்டுக் குபுக்கெனத் தாவி
ஓட்டு வண்டியை ஓட்டிச் செல்லுவார்!

‘தென்மொழி’ப் படைஞர்க்கு அடைவீடு அவர்மனை!
பன்மாண் திறலோ டிதழ்வினை பகிர்ந்து,
தேர்ந்து முடித்துத் திங்களில் ஒருமுறை—
காரியும் ஞாயிறும் கடற்கரை அடுக்கும்
முழுப்பொழு தெல்லாம் மூர்த்திக் குப்பம்
திருக்குறள் பெருமாள் சிறுகுடில் திண்ணை
தூளி படுக்கும்!

தென்மொழித் தம்பியர்
தோளொடு தோள்கள், தூய்தமிழ் நெஞ்சுகள்
கலந்துற வாடுங் கருத்துப் பொழிவுகள்,
புலந்துண வுண்ணும் பொலிந்த காட்சிகள்,
நாட்டுதற் கியலா நாடக இலக்கியம்!

ஊட்டுதற் கலையும் உள்ளமும் கையுமாய்
முப்பொழு திருப்பினும் முகங்கோ ணாத
குப்பம் மாள் எனும் குடித்தனக் காரிக்குச்
செப்பமாய் அமைந்த சிறப்பெலாம் என்னெனின்,
ஒப்புரைக் கில்லாத் ‘தென்மொழி’ உழைப்பால்
உடலும் நெஞ்சமும் ஒருங்குறச் சோர்ந்து,
கடற்கரை நண்ணும் காலத்தி லெல்லாம்,
கையில் கிடைத்ததை, மடியில் நிறைத்ததை,
பையில், பானையில் கைவிட்டுத் துழவிக்
கொஞ்சங் கொஞ்சமாய்க் கூட்டிச் சேர்த்ததை
எஞ்சுத லின்றி எடுத்தெடுத் தீந்து
தென்மொழிக் குடும்பம் தின்று மகிழ்வதைத்
தன்விழிப் பருப்பால் தான்விழுங் குவதே!

பெருமாள் பெற்ற பெருமை எல்லாம்
திருக்குறள் ஒன்று! தேய்விலா அன்பின்
குப்பம் மாள்எனும் குணக்குன்று ஒன்று!
தப்பில் லாமல் தமிழ்ப்பணி செய்யும்
திருக்குறள் பெருமாள் குடும்பம்
இருக்குநாள் எல்லாம் இருக்குமெந் தமிழே!

இயற்கை வலமும் இடமும்.

சா. ஆபிரகாம், பட்டப் பின் படிப்பு விலங்குத் துறைத் தலைவர் அமெரிக்கன் கல்லூரி மதுரை.

நாம் காலையில் நரலை(கடல்) யோரத்தில் நடந்து செல்வோமாயின், நம் கண்ணிற்குக் காட்சியளிப்பன நத்தைக் கூடுகளும் நகர்ந்து செல்லும் நண்டுகளுமே. சங்குகளை நாம் உற்று நோக்குவோமானால், பெரும்பாலானவை இடம்புரிச் சங்குகள் என்பது தெளிவாகும். இவற்றின் புரிகள் இடமிருந்து வலம் நோக்கி அமைந்துள்ளன. உள்ளறைகள் வலம் நோக்கி அமைந்துள, வாயின் வலம்புரிச் சங்குகளாகும் இவற்றின் புரிகள் வலமிருந்து இடம் நோக்கிச் செல்லும். வலம்புரிச் சங்குகள் கிடைப்பதற்கரியவை. கடவுட் படிமத்தை நீராட்ட இவ்வலம்புரிச் சங்கு கொண்டு நீரை மொண்டு ஊற்றுவர். இராமேசுவரத்தில் ஆறு வலம்புரிச் சங்குகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றில் மூன்று, முற்கால இராமநாதபுரச் சிற்றரசர்களால் கோயிலுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டவை. எளிதில் கிடைக்காத பொருளை வலம்புரிக்கு ஒப்பிடுவார்கள். எடுத்துக்காட்டாக: கோவலன், கிடைத்தற்கரிய கண்ணகியை 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே'' என்று மனமாற வாழ்த்துகின்றான். சங்கு எடுப்பவர்கள் எல்லாரும் சங்குகள் எடுத்தால் அவற்றில் ஒரு வலம்புரிச் சங்கு அகப்படலாம் என்கிறார்கள்.

இஃது ஒருபுறம் இருக்கட்டும். இச்சங்குகளில் வாழும் நத்தைகளைப் பொறுத்தவரை அவை வலம்புரியில் வாழ்ந்தாலும், இடம்புரியில் இருந்தாலும் அவற்றுக்குச் சங்கு வேறுபாடு கிடையாது. ஏனெனில் இரு வகைச் சங்குகளும் ஒரே வகைப் பாதுகாப்பையே அளிக்கின்றன. அவற்றின் வளர்ச்சிக்கு அச்சங்குகள் எவ்வகை இடையூறும் அளிப்பதில்லை. மக்களிலுங்கூட வலக்கையர், இடக்கையரைவிட மிகுதியாகவே இருக்கிறார்கள். ஆனால் சில இனச் சங்குகளில் இடம்புரிச் சங்குகள் மிகுதியாக இருப்பதுபோல், சில தீவுகளிலுள்ளோரிடையே இடக்கையர் மிகுதியாக இருப்பது நமக்குப் பெரும் இறும்பூது அளிக்கும். ஆண்டு வலக்கையரைக் காண்டலரிது.

சங்குகளின் புரிகள் சில வலமாகவும், சில இடமாகவும் அமைவதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. பிரான்சு நாட்டு வேதியலறிஞரது விளக்கம் :—இராசுமிக் அமில (Rasmic Acid)

உப்பின் படிவங்களில் மூலக் கூறுகள் [Elements] இருப்பினும், அவற்றின் அணுக்கட்டுகளின் [Molecules] அமைப்பில் மாறுபாடு இருப்பதாகக் கண்டார், பாசுற்றியர் [Pasteur]. அஃதாவது ஒரு வகைப் படிகத்தில் அணுக்கட்டுகள் வலம்புரிபோலும், இன்னொன்றில் இடம்புரி போலும் அமைந்திருக்க வேண்டுமென்று முடிவு செய்தார். ஒருவகைப் படிகத்தைக் கரைசலாக்கினர். அஃது ஒளியை இடமாகத் திருப்பியது. அடுத்த வகைப் படிகம ஒளியை வலமாகத் திருப்பியது. அதுபோல, நத்தைகள் வளரும்போது அச்சங்கின் அணுக்கட்டுகள் வலமாகவோ, இடமாகவோ அமைவதைப் பொறுத்துச் சங்குகள் வலம்புரியாகவோ, இடம்புரியாகவோ மாறுகின்றன. சிலர் சங்கின் புரிகள் கடல் நீரின் தட்ப, வெப்ப மாறுதல்களாலும், அல்லது நீரின் காரம், அமிலம் முதலியனவற்றின் காரணங்களாலும், மாறுவதாகக் கருதுகிறார்கள். ஆனால் இந்நிலைமைகள் எல்லாச் சங்குகளையுமே தாக்குதல் வேண்டுமன்றோ? ஆகையால் அவை தக்க காரணங்களாகா.

உயிர் நூல் வல்லுநர்கள் புரியின் போக்கிற்கு வேறு ஒரு காரணம் கூறுகிறார்கள். அதை ஈண்டு நோக்குவோம்:

நத்தையின் அண்டமும், விந்தணுவும் கலந்தால் உண்டாகும் இணையுயிர் (Zygote) முதல் பிரிவில் ஈருயிரணுக்கள் உண்டாகின்றன. இரண்டாவது பிரிவின்போது அவை நான்கு அணுக்களாகியும், மூன்றுவது பிரிவின் போது நான்குயிரணுக்கள், எட்டுயிரணுக்களாகி, அவை ஓரடுக்கில் நான்கு அணுக்கள் மேனி, ஈரடுக்குகளாகவும் அமைகின்றன. அப்போது மேலடுக்கின் உயிரணுக்கள் கீழடுக்கு உயிரணுக்கள்மேல் அமையாது, அவற்றின் இடைவெளியில் அமைகின்றன. அவ்வாறு அமைவதற்கு அவை காலங்காட்டியின் (Clock) கைகள்போல் வலமாக வருமானல் சங்குகள் வலம்புரியாகவும், அல்லது அம்மேலடுக்கு உயிரணுக்கள் இடம் வருமானல் இடம்புரியாகவும் அமைகின்றன என்கிறார்கள். இவ்வாறு புரிகள் அமைதல் அண்டத்திலுள்ள பொருள்கள் அவ்வாறு அமைதலால் உண்டாகுமா என்ற கேள்வி எழுந்தது. ஆனல் அண்டங்களைச் சுழற்பொறியில் (Centrifuge) வைத்துச் சுற்றிப் பொருள் உள்ளமைவைக் கெடுத்தபொழுது அவ்வண்டங்களின் உட்பொருள்கள் பழைய இடங்களிலமைந்து, பொதுவான அண்டங்களைப் போலவே வலம்புரி அல்லது இடம்புரிச் சங்குகளை உண்டு பண்ணின. ஆகையால் நத்தைக்

கூடுகளின் புரிகளுக்குக் காரணம் அண்டத்துள்ள உணவுப் பொருட்களின் அமைவு அன்று. ஆனல் புரி அண்டத்துள் இருக்கும் உயிர்ப் பொருளின் பெற்றியே. இயற்கை அன்னை, வலம்புரி, இடம்புரி என்பனவற்றில் ஒன்றையே பெரிதும் விழைகிருள். எடுத்துக்காட்டாக, இயற்கைப் பொருட்களில் ஊக்கிப் பொருட்கள், நிலைத்திணைமருந்துகள் (Drugs) ஒளியை இடமாகத் திருப்புகின்றன. ஆனல் இதே பொருட்களைச் செயற்கை முறையில் அமைத்து அவற்றினூடே ஒளியைச் செலுத்தினல் அவை ஒளியை வலமாகத் திருப்புகின்றன. நம் உடலில் சில அணுக்கட்டுகள் வலம்புரியாகவும், சில இடம்புரியாகவும் அமைந்துள்ளன. இவற்றில் ஒருவகையான அணுக்கட்டை உடம்பு வெளியேற்ரு விட்டால் உடம்பில் நிகழும் உயிர் வேதியல் மாற்றங்களில் கேடுகள் விளையும். இதற்கு ஒரு சான்ருக, உடம்பு வலம்புரி "பினைலலனைன்" (Phenylalanine) என்ற அமினே அமிலத்தைப் பயன்படுத்துகிறது. ஆனல், இடம்புரிப் பினைலலனைப் பயன்படுத்துவதில்லை. ஆகையால் இது வெளியேற்றப்பட வேண்டும். இல்லையேல், கல்லீரலில் நடைபெறும் மாற்றங்களை இது தடைசெய்கிறது. அதன் பயனக "பினைல் கீற்ருேனியூரியா" (Phenylketonuria) எனும் நோய் உண்டாகிறது. இது மூளையைத் தாக்குகின்றது. ஆகவே இயற்கை அன்னையின் திருவிளையாடல்களால் புரிகள் ஏற்படலாம் எனப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

இறுதியாக மற்ருெரு காரணத்தையும் சொல்லிவிடலாம். ஓர் உயிர் பெரிதாகும்போது அதன் எடை அதன் நீளத்தின் முப்படியாகவும், அதன் உடற் பரப்பு அதன் உடம்பின் இரு படியாகவும் மிகுகின்றன என்று சொல்லுகிருர்கள். அப்போது அவ்வுயிரின் உணவைக் குடலின் உட்பரப்பிலிருந்தும், உயிர் வளியைக் காற்றறைகளின் உட்பரப்பிலிருந்தும் உறிஞ்சுகின்றது. பெரிய உயிர்கள் மிகுதியான உணவை உட்கொள்ள உணவுக்குழலின் உட்பரப்பை மிகுதியாக்க அதன் நீளத்தை மிகுக்கின்றது. நீண்ட உணவுக் குழலைச் சிறு உடம்பில் வைப்பதற்காக அக்குழலை முன்னும் பின்னும் மடித்து வைக்க வேண்டியுள்ளது. அதன் முதல் மடிப்பு வலப்பக்கமாகவோ, இடப்பக்கமாகவோ இருக்கிறது அப்போது அதன் உடலின் உட்சமச்சீரின்மை நிகழ்கின்றது. இதனல் பிற பாகங்களும் சமச்சீரின்றி அமைகின்றன. இக்காரணத்தால் குடல் வால் (Appendix) சிலருக்கு இடப்பக்கம் அமைந்துவிடுகிறது. அப்

போது அறுவை மருத்துவர்கள் அதைக் கண்டுபிடிக்கத் திணறிவிடுவார்கள். ஆகவே மிகப் பழங்கால முன்னோரின் உடம்பில் முதல் மடிப்பு எத்திசையில் ஏற்பட்டதோ, அத்திசையினுல் ஏற்பட்ட மாறுதல்களால் நாம் வலக்கையராய் அல்லது இடக்கையராகிறோம். இக்காரணத்தாலேயே சில சங்குகள் வலம்புரியாகவும் சில இடம்புரியாகவும் அமைகின்றனவென்கிறார்கள். நிலம் வாழ் நத்தைகள் இடம்புரிகள் உள்ளவை; நீர்வாழ் நத்தைகள் வலம்புரிகள் உள்ளவை. வலம்புரிச் சங்குகள் ஒருவரிடமிருந்தால் அவருக்கு எல்லா நலன்களும் பெருகுமென்பர்; ஆயினும் அஃது இருந்ததால் இழப்பு அடைந்தவர்களும் உளர்.

இனி மக்களில் இடக்கையரைப் பற்றிச் சற்று எண்ணிப் பார்ப்போம். இரண்டாவது உலகப் போருக்கு மறவர்களைத் தேர்ந்தெடுத்த மருத்துவர்கள் முதற்போரின்போது இருந்த இடக்கையரைவிட, இரண்டாவது உலகப் போருக்கு வந்த மறவர்களில் இடக்கையர் மிகுதியாக இருப்பதாக அறிந்தார்கள். இடக்கைப் பையன்கள், இடக்கைப் பெண்களைவிட ஒன்றரைப் பங்கு மிகுந்து உள்ளனர். இது மரபுக் குணத்தால் ஏற்படலாம்! அல்லது ஆசிரியர் அல்லது பெற்றோர்களது அறிவு வளர்ச்சியினுல் அவர்கள் இடக்கையரை வன்முறையில் வலக்கையராய் மாற்றுததினுல் ஏற்பட்டிருக்கலாம். (முற்காலத்தில் இடக்கையரை இளம்பருவத்தில் அடித்தோ ஏசியோ வலக்கையராக்க முற்பட்டார்கள். இது தவறு.) தற்போது நூற்றுவரில் நால்வர் அல்லது ஐவரே இடக்கையராய் இருக்கிறார்கள். சிறிது காலத்திற்கு முன் எடுத்த, புள்ளிவிளத்தக் கணக்கின்படி இடக்கையராய்ப் பிறந்த நூற்றுவரில் எழுவர் மட்டிலும் தங்கள் வாழ்க்கை முழுவதும் இடக்கையராய் இருந்தார்கள். மற்றொரு வன்முறையில் வலக்கையராக மாற்றப் பட்டிருக்க வேண்டும். இடக்கையரை வலக்கையராக மாற்றினுல் அவர்கட்கு நரம்புக்கோளாறு ஏற்படும் என்று பெற்றோர் அச்சம் கொள்ளவேண்டா. ஒரு வேளை சிறிது காலத்திற்கு அவர்கள் மனநிலையில் முன்னேற்றம் இல்லாதிருக்கலாம். ஆனுல் பின்பு மற்றவர்களைப் போலவே முன்னேற்றப் பாதையில் செல்லுகிறார்கள். நாய்கள் இடக்கையனவாகவோ, வலக்கையனவாகவோ இருக்கின்றன. ஒரு கையினுல் (முன் காலால்) கை குலுக்கிய நாயை அடுத்த கையால் கை குலுக்கப் பயிற்றுவித்தால் அதற்கு ஒரு கெகைக் கெடுதியும் விளைவது இல்லை. ஆனுல் அவற்றை இருகைகளாலும்

மாற்றி மாற்றிக் கைகுலுக்கப் பயிற்றுவித்தாற்ருன்அதற்கு நரம்புக் கோளாறு ஏற்படுகின்றதென்கின்றனர்.

மக்களின் வலக்கைப் பழக்கத்திற்குப் பல அமைவுகள் கூறுகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்டகால "நியான்டர்தால்" [Neanderthal] மக்களிடையே வலக்கையரும் இடைக்கையரும் ஒரே எண்ணிக்கையுடையவர்களாயிருந்தனர். பின்பு வலக்கையினர் மிகுதியானுர்-கள். வலக்கை ஓங்கி நிற்பதற்குப் பல காரணங்கள் உள. நம் முன்னேர் விலங்குகளோடு போரிட்டபோது இடக்கையினுல் நெஞ்சத்தைப் பாதுகாக்க, அதை மார்பின் இடப்பக்கம் வைத்துக்கொண்டு, வலக்கையால் போரிட்டதால் வலக்கை ஓங்கியதென்கிருர்கள். அல்லது நெஞ்சத்தைக்காக்க மார்புக் கவசத்தை இடப்பக்கம் வைத்துக்கொண்டு, வலக்கையால் வாளேயோ, ஈட்டியையோ ஏந்திக்கொண்டு போரிட்டதால் வலக்கையின் வலிவு மிகுதியானது என்கின்றனர். மேற்கூறிய இரு விளக்கங்களும் நெஞ்சம், மார்பின் இடப் பாகத்தில் இருக்கிறது என்ற தப்பெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ளன. ஏனெனில் நெஞ்சம் மார்பின் இடப்பாகத்திலில்லை; மார்பின் நடுக் கோட்டிற்குச் சற்று இடமாகச் சாய்ந்துள்ளது. ஆகையால் மேற்கூறிய காரணங்களே நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. உடம்பின் ஏணை ஈர்ப்புமையம் [Centre of Gravity] உடம்பின் வலப்பக்கத்திலுள்ளது. ஒரு மாந்தனின் உடம்பில் வலப்பாதி, இடப்பாதியைவிட 15 விரலிகை [அவுன்சு] மிகுதியான எடை உள்ளது. இஃது ஒருவேளே வலக்கையைப் பெரும்பாலும் பயன்படுத்துவதால் ஏற்பட்ட விளேவாயிருக்கலாம் என்று சொல்கிருர்கள். ஏனெனில், பொதுவாக வலக்கையரின் வலக்கையும், தோளும், இடக்கையரின் இடக்கை, தோள் இவற்றைவிடப் பெரியவாக உள.

நம் உடம்பின் ஒரு பக்கத்துத் தசைகள், கண், கால் முதலானவற்றை மூளேயின் எதிர்ப்பாகம் கட்டுப்படுத்துகிறது. அஃதாவது வலக்கைத் தசைகளே மூளேயின் இடப்பாகமும், இடக்கை, கால் தசைகளே மூளேயின் வலப்பாகமும் ஆளுகின்றன. பெரும்பாலான மக்களுக்கு இடக்கண் வலக்கண்ணேவிட நன்ருக அமைந்துள்ளது என்கிருர்கள். ஆகவே ஒரு கை மற்ற கையைவிட மிகுதியாகப் பயன்படுத்துவதற்குக் காரணம் பெரு மூளேயின் ஒரு பாதி மற்றபாதியைவிட நல்ல வளர்ச்சியுடைமையே என்று கருதுகிருர்கள். இடக்கை

யர் வலக்கையரைப்போல் இடக்கால் அல்லது வலக்காலை பெரும்பாலான வேலைகளுக்குப் [நொண்டியடித்தல் போன்ற விளையாட்டுகளுக்கும் கூட] பயன்படுத்துகின்றனர்.

இடக்கையர் வெவ்வேறு தொழில்களைச் செய்வதில் அவர்களின் இடக்கைகள் அவர்களுக்கு எவ்வகை இடரோ, இடையூறோ விளைவிப்பதில்லை. சம்மட்டியடிக்கும் இடைக்கையர் வலக்கையரைப்போல் திறமையுடன் பணியாற்றுகின்றனர். தூரிகை கொண்டு பறவைகளின் வண்ணப் படங்களைத் தீட்டி மன்னு மண்ணுலகில் மன்னு புகழ் அடைந்த பீட்டர் ஸ்காட் [Peter Scott] இடக்கையரென்பது பெரும்பாலருக்குத் தெரியாது.

குறிப்பிட்ட கையைப் பயன்படுத்துதல் மரபுத் தொடர்பு [Heredity], உடம்பின் உட்சூழல், வெளிச் சூழல் இவற்றின் செயலாற்றலால் நிகழ்கின்றதென்கிறார்கள். இடக்கையரைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் வலக்கையராக மாற்ற முற்படுவதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். மரபும் ஒரு கை ஓங்கலுக்குக் காரணமாயிருக்கலாம். [இரட்டையர் இரு வகையினர். ஓரண்டம் ஈரண்டமாகப் பிரிவதாலுண்டாகும் இரட்டையரை ஓரண்ட இரட்டையர் [Monozygotic Twins]என்றும்,ஒரே கூட்டில் ஈரண்டங்களிலிருந்து தனித்தனியாய் வளரும் இரட்டையரை ஈரண்ட இரட்டையர் [Dizygotic Twins] என்றும் சொல்லுவார்கள்]. ஓரண்ட இரட்டையரின் உறவினர்களில் 41 விழுக்காட்டினரும், ஈரண்ட இரட்டையரின் உறவினர்களில் 16 விழுக்காட்டினரும் இடைக்கையராய் இருக்கின்றனரென்பது, புள்ளி விளத்தங்களிலிருந்து தெரிகிறது. இடக்கையரின் கைப்பெருவிரலில், வலக்கையரின் பெருவிரலில் இருக்கும் வரைகளினும் மிகுந்த சுழிகள் இருப்பதாகக் கண்டுள்ளனர். "இடக்கை ஓங்கல்", இடக்கையரான பெற்றோரிடமிருந்து அடையப் பெறுகிறது எனலாம்.

ஒரு வலக்கைத் தாய் குழந்தையை இடக்கையில் வைத்துக் கொண்டு வலக்கையை வாளா [Free] வைத்திருந்தால் குழந்தையின் வலக்கை தாயின் கழுத்தைத் தழுவும். ஆனால் இடக்கை பொருளைப் பிடிக்கத் தாராளமாகப் பயன்படும், ஆதலால் அஃது இடக்கையதாக மாறும்.

இறுதியாகப் பிற விலங்குகளில், விலங்குகளின் சில பாகங்கள் இடப்பக்கமாகவோ, வலப்புறமாகவோ அமைவிலும் அலுவலிலும் அமைவது ஈரணு உயிர் முதலாக மக்கள் ஈறாகவுள்ள எல்லா உயிர்களிலும் காணலாம். "திராபிடோ அட்ராக்டசு அகுமினேட்டசு" [Tropidoatractus Acuminatus] என்ற ஓரணு உயிரின் உறையில் வரைகள், வலப்பக்கமாகச் சாய்ந்துள்ளன. வளையப் புழுக்களில் [Annelids] வாழும் ஓடுகள் வலம் அல்லது இடம் நோக்கியோ திரும்பி இருக்கின்றன.

இனி, பிற உயிரிகளில் உள்ள வல இடக் கைப்பழக்கங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். மக்களைப்போல் குரங்குகளிலும் இப் பழக்கம் உண்டு. கிளிகளில் வலக்காலை மிகுதியாகப் பயன்படுத்தும் பறவைகளைக் காண்டலரிது. எடுத்துக் காட்டாக, வாசிங்டனிலுள்ள ஒரு விலங்குக் காட்சிச் சாலையில் கொட்டைகளைப் பிடித்துக் கடிப்பதில் எக்காலைப் பெரிய கிளிகள் [Macaws] பெரிதும் பயன்படுத்துகின்றன என்பது ஆராயப்பட்டது. இருபது பெரும் கிளிகளில் 15 பறவைகள் இடக்காலையே மிகுதியாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. சில யானைகளில் ஒரு மருப்பு [தந்தம்] மற்றதைவிட நல்ல வளர்ச்சியுடையது.வல மருப்பு தோண்டுவதற்கும், பிற அலுவல்களுக்கும் பயன்பட்டால், இட மருப்பு, தேய்வில்லாமையால் சற்றுப் பெரிதாக வளர்கிறது. யானைகள் தம் முன் கால்களில் இடக் காலைப் பெரிதும் பயன்படுத்துவதாக இந்திய வனவிலங்கு ஆய்வாளர் இ.பி. கீ [Gee] கண்டு உள்ளார். இக்களிறுகளை "இடக்கையர்" என்று நாம் அழைக்கலாம்.

சிலந்திப் பூச்சிகளிலும் வலம் இடம் என்ற சிக்கலும் உண்டு. பாச்சான்[Crickets]களில் வல இறக்கையைப் பயன்படுத்துவன உண்டு. இவை கால்களில் சீப்புப் பற்கள்போல் உள்ள நுட்ப வரைகள் சுரசுரப்பான ஓரத்தில், தங்கள் இறக்கையைத் தேய்த்து ஒலி உண்டர்க்குகின்றனவாம்.

இருல்களிலும் [Lobsters], சில நண்டுகளிலும் ஓரிணை இடுக்கிக் கால்களில் [Chelate Legs] உண்டு. அவற்றில் ஒன்று மற்றதை விடப் பெரிதாக வளர்கிறது. நமது கடற்கரைகளில் இவ்வகை நண்டுகள் உண்டு. இவை பாம்பன் முதலிய இடங்களில் மிகுதியாம். அவற்றுக்கு வண்ணார நண்டு [Dhobi Crab] என்று பெயர். இவை தத்தம் வளைகளுக்குள் வாழ்கின்றன, இவற்றின் பெரிய இடுக்கிக்கால் சிவப்பு அல்லது மஞ்சள் நிறமுடையது. இந்நண்டு சில நேரங்களில் வளைக்கு வெளியே வந்து தன் பெரிய இடுக்கிக் காலை மேலும், கீழுமாக இயக்கிக் கொண்டிருக்கும். இக் கால் இயக்கத்தின் முதல் நோக்கம் "இஃது என் ஆட்சிப் பகுதி, [Territory] வேறெருவரும் இங்கு வரக்கூடாது" என்று மற்ற நண்பர்களுக்கு அறிவிக்கவே. மற்றெரு நோக்கம் தன் காதலியை அழைக்க.

கலிபோர்னியா நாட்டு நாக்கு மீன் வலப்பக்கம் கண்களுடையன; கலிபோர்னியாவிற்கு வடக்கிலுள்ள பாகங்களின் நாக்கு மீன்கள் இடப்பக்கம் இரு கண்கள் உடையவை. பிரிட்டிசு கொலம்பியாவிலுள்ளவற்றில் சில இடப்பக்கத்திலும், சில வலப்பக்கத்திலும் இரு கண்களையும் உடையன. அலாசுகாவிலுள்ள மீன்கள் இரு கண்களையும் இடப்பக்கத்திலேயே உடையன.

மக்கள் விரும்பியுண்ணும் கிளிஞ்சல் [Edibile oyster] வகை ஒன்றுண்டு. இக்கிளிஞ்சல் இளமையில் பக்கத்திற்கொன்ருக ஈரோடு களைக் கொண்டது. ஆனால் அகவை முதிர்ந்து அண்டங்களையிடும் பருவம் எய்தியவுடன் மிகுதியும் வளைந்த இடப்பக்கமாக ஓடு பாறை யில் அல்லது கடலோர மரவேர்களில் ஒட்டிக்கொண்டு மெதுவாக உள் உறுப்புகள் கலம்போல் பெரிதாக வளர்கின்றன. ஆனால் சிறிய வலப்பக்க ஓடு பருமனில் சிறுத்து அதன் மூடிபோல் அதன் மேல்பாகத் தில் அமர்கிறது.

நாக்கு மீன், எருமை நாக்கு முதலிய மீன்கள் குஞ்சுகளாயிருக் கும்போது உடம்பு சமச் சீருள்ளது. மற்ற மீன்களைப்போல் இவையும் நீந்துகின்றன: பின்பு இடப்புறமாய்ச் சாய்ந்து படுமட்ட நிலையை அடைந்து அந்நிலையிலேயே இடம் பெயர்கிறது. இதன் விளைவாக மண்டையோட்டின் முன் பாகம் திருகுகிறது [Twists]. ஆதலால், இடப்பக்கக் கண் வலக்கண் குழிகள் படுத்திருக்கும் பக்கத்தின் எதிர்ப் பக்கத்தில், வலப்பக்கம் தோன்றுகிறது. ஆகையால் இரு கண்களும் வலப்பக்கமே தோன்றுகின்றன. இதை வலக்கை [Right-handed] மீன் எனலாம். இவற்றின் இரு கண்களும் இடப்பக்கம் தோன்று கின்றன: செங்குத்து நிலையில் நீந்தும் மீன்கள், இளம் பருவத்தில் வலப்பக்கமும், இடப்பக்கமும் ஒரே நிறமுடையதாயுள்ளன. கண்களும் பக்கத்திற்கொன்ருக அமைந்துள. உடம்பு பக்கமாகத் தட்டையா யுள்ளது. உருமாற்றத்திற்குப் பிறகு உடல் படுமட்டமாகிவிடுகிறது. கடலின் அடித்தளத்தைத் தொடும்பக்கம் வெளுத்துவிடுகிறது. இரு கண்களும் அப்பக்கத்திற்கெதிராக உள்ள மேற்பக்கத்திற்கு வந்துவிடு கின்றன. ஆகையால் பெரிய மீன்களிற் சிலவற்றில் பழைய வலப் பக்கத்திலும், சிலவற்றில் இடப்பக்கத்திலும் தோன்றுகின்றன. இயற்கை அன்னையின் திருவிளையாடல்தான் என்னே!

தமிழர், மண்ணுலகும் விண்ணிலங்கும் பகலவனும் வலமாகச் சுழல்கின்றன என நம்பினுர்கள். இக் கருத்தைப் பின்வரும் கழகப் பாடல்களிற் காணலாம் :—

" வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் பெரும்பெயல் பொழிந்தன "

என்ற அடிகளால் நாம் அறியலாம்.

இவ்வடிகளில் முகில்களெல்லாம் வலமாகச் சுழன்று மழை பெய்கின் றன என்று புலவர் புகல்கின்ருர். பின்னும்,

" உலகம் உய்ய வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு " என்ற அடி களில் சூரியனும் வலம் வருகிறதென்கிருர், ஒரு புலவர்! 0

வியப்பூட்டும் தேனீக்கள்!

—செ. பன்னீர்ச்செல்வம்

ஒரு கடுமை மிக்க உழைப்பின் கூட்டமே தேனீக்களின் உலக மாகும். அஃது இயற்கையின் வியப்புமிக்க படைப்புகளில் ஒன்று. ஓர் உயிரி, சில புறச்சூழல்கட்கு ஏற்ப ஒரு பாலினத்தையோ அல்லது மற்றொரு பாலினத்தையோ உண்டாக்கும் திறமையைப் பெற்றிருக்கக்கூடும் என்பது நம்புதற்கரிதாயுள்ளது. ஆனால் இவ்வுண்மை முழுமையாகவும், விரிவாகவும் விளக்கவியலாத அளவுக்கு அமைந்துள்ளது. இதற்கு விளக்கம் காணும் முயற்சியில் ஈடுபடுங்கால் பல புதிய அருஞ்செய்திகளையும் அறிய நேர்கின்றது.

தேனீக்கள் மிகச்சிறந்த வாழ்வியல் அமைப்பினையுடைய, கூட்டு வாழ்க்கை முறைமைகளையும், தொழிலியல் அமைப்பு முறைமைகளையும் மேற்கொண்டுள்ள ஈக்களின் இனமாகும். அவை முப்பெரும் இனங்களாகத் திகழ்கின்றன. முதலினம் ஈயரசி (Queen Bee) எனப்பெறும். இரண்டாம் இனம், உழைக்கும் ஈக்கள் (Workers Bee) எனப்பெறும், பெண் ஈக்கள். இவை ஒரு கூட்டில் 20000 முதல் 30000 வரை இருக்கின்றன. மூன்றும் இனம், உழைக்கா ஈக்கள் (Drones) எனப்பெறும் ஆண் ஈக்கள். இவற்றின் எண்ணிக்கை ஒரு கூட்டில் சில நூறே.

ஈயரசி:—(இராணி ஈ) தேன் கூட்டிலுள்ள எல்லா உழைக்கும் பெண் ஈக்கட்கும், உழைக்கா ஆண் ஈக்கட்கும் ஈயரசிதான் தாய் ஆகும். அது மூன்றுண்டுக் கால வாழ்நாட் பேரெல்லையை (Life span) உடையது. கூட்டிலுள்ள ஈக்கள் யாவும் ஒரே ஓர் ஈயரசியைத்தான் தம்மை ஆட்சி செய்ய ஒப்புகின்றன. அவ்வாறே ஈயரசியும் வேறோர் ஈயரசி கூட்டில் இருக்கப் பொறுப்பது இல்லை.

ஒரு கன்னிமை ஈயரசி (Vergin Queen) கருக்கொள்வதற்கு ஒரு வகை வாய்ப்பும் இல்லாமலேயே, முட்டைகளை இட்டு, பிற விலங்குகள் இயல்பான முறையில் தாய்மைப் பேற்றை அடைவது போன்ற இளங்குழவிகளை உண்டாக்குகின்றது. ஆனால் அப்பொழுது அதனால் இடப்பெறும் முட்டைகள் யாவும் ஆண் ஈக்களை மட்டுந்தாம் தோற்றுவிக்கும். அஃது ஆண் ஈக்களோடு "மணங்கொள்ளும் வான் செல"வை (Wedding flight) மேற்கொண்டு கருவூட்டப்பெற்ற பின்பே இரு வகைப் பாலின முட்டைகளையும் தோற்றுவிக்கின்றது. பருவக்கால உயர் நிலையில் நாளொன்றுக்கு

1500 முட்டைகளை இடுகின்றது. அவை ஏறத்தாழ அதனுடைய எடையில் இரு மடங்காகும்.

ஓர் ஈயரசி அல்லது பெண் ஈயானது, ஓர் உழைக்கும் ஈயினுடைய அளவு, உருவம், வினைமுறை, இயல்புணர்ச்சி இவற்றில் வேறுபட்டிருந்த போதிலும், உழைக்கும் ஈ தோன்றுகின்ற இன முட்டையிலிருந்தே பொரிக்கப்பெறுகின்றது. அது முட்டைப் புழுவாக இருக்கும்பொழுது கன்னித் தாய்ச்சி ஈக்கள் (**Nurse Bees**) அண்மையில் பொரிக்கின்ற முட்டைப் புழுக்களில் (**Larve**) ஒன்றை எடுத்து மிகையான இடமுள்ள கண்ணறையில் (**Cell**) வைத்துத் தனிச் சிறப்புப் பாகினை (**Royal Jelly**) அதற்கு உண்பிப்பதினால் அஃது ஓர் உழைக்கும் ஈயரவதற்கு மாறாக ஈயரசியாக மாறுகின்றது.

கண்ணறையிலிருந்து வெளிப்பட்ட ஈயரசி காதற் போரில் ஈடுபடத் தொடங்குகின்றது. ஒரு கிழமைக்குள் அது முதலுறவு வான் செலவை (**Nuptial flight**) மேற்கொண்டு வானில் பறந்து திரிகின்றது. பிற்பகலில்–நண்பகலுக்கும், கதிரவன் மறைவுக்கும் இடைப்பட்ட நேரத்தில்–இவ் வான்செலவை மேற்கொள்ளுகின்றது. ஈயரசி தன் கூட்டைச் சேர்ந்த ஓர் ஆண் ஈயுடனோ அல்லது வேறொரு கூட்டைச் சேர்ந்த ஈயுடனோ தொடர்பு கொள்கின்றது. சில வேளைகளில் மிகையான எண்ணிக்கையுள்ள உழைக்கும் ஈக்களும் பின் தொடர்கின்றன.

ஈயரசி "மணங்கொள்ளும் வான் செல"வில் முயன்று பெற்ற ஆண் கரு நீர்மத்தை (Sperm) வாழ்நாள் முழுமைக்கும் வழங்குதற்குத் தேவையான அளவு தன் உடலில் பெற்றிருக்கின்றது. சூழ்நிலைக்கேற்றவாறு அதைப் பயன்படுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ அதற்கு இயலும். முட்டையிடும் காலத்தில் கருவகத்திலிருந்து முட்டையைக் கொண்டு வருகின்ற இழை நாளம், முட்டைத் தூம்பு (**Oviduct**) எனப்பெறும். அவ்வாறான இரு இழை நாளங்கள் ஆண் கருமூலச் சுரப்பியில் (**Spermatheca**) ஒன்றி யிணைகின்றன. அவை ஈயரசியானது, ஆண் ஈக்களால் கருவூட்டப்பெறும்பொழுது ஆண்கரு நீர்மத்தைப் பெறுகின்ற தன்மையில் அமைந்துள்ளன. முட்டை, ஆண் கருமூலச் சுரப்பியின் வாயிலைக் கடக்கும்பொழுது, மிகச் சிறு அளவினதாகிய ஆண் கருநீர்மம், கருவூட்டப் பெறுவதற்காக அல்லது வளப்படுத்துவதற்காக அதில் சேர்க்கப் பெறுகின்றது.

ஈயரசி வானில் ஓர் ஆண் ஈயுடன் தொடர்புகொண்டு கருவூட்டப் பெற்றவுடன், கொடுக்குப் போன்ற வெண்ணிறப் பொருளாகிய ஆண் உறுப்பின் ஒரு பகுதியுடன் கூட்டிற்குத் திரும்புகின்றது. அஃது உழைக்கும் ஈக்களால் கவனமுடன் வரவேற்கப் பெற்றுப் பணிவிடை செய்யப் பெறுகின்றது. பொதுவாகவே கன்னிமை ஈயரசி, தன் வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் ஆண் ஈயுடன் தொடர்பு கொள்கின்றது. ஆனால் அது தன்னகத்தே ஆண் ஈயிடமிருந்து பெற்ற ஆண் கரு நீர்மம் உள்ளவரை தொடர்ந்து முட்டைகளை இடுகின்றது. ஆண் ஈக்களுடன் ஈயரசி வானில் தொடர்பு கொள்ளத் தவறினால், அடுத்துவருகின்ற நாட்களிலும் அது வான் செலவை மேற்கொள்ளுகின்றது.

இந் நிகழ்ச்சிகளில் உயிர்த் தோற்றத்தின் புதிரானது மூல அணுக்களின் எந்த மறைவான உள்ளிடத்திலோ அல்லது கரி (Carbon), நீரக (Hydrogen), வெடியத் (Nitrogen) தனிமங்களின் இடையிடத்திலோ ஒளிந்திருக்கின்றது! உண்டு வாழ்தலையே உடைய எளிய உயிரிகளின் இச் செய்கை உண்மையிலேயே மிகப் பெரிய வியப்புக்குரியதாகும்.

ஒவ்வோர் ஈயரசியும் தனக்கென்றே ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த நறுமணம் கொண்டு திகழ்கின்றது. அது முட்டையிடுவதற்காகக் கண்ணறைகளை நாடித் தேனடையின்மீது அங்குமிங்கும் சுற்றித் திரியும்பொழுது கூட்டிலுள்ள ஈக்கள் அவளுடைய மனத்தைக் கொண்டே அவள் வருகையை நன்கறிந்து கொள்கின்றன. ஈயரசி இல்லாமையை அதனுடைய வாடையின்மையைக்கொண்டு அறிந்து கொள்கின்றன. தேன் கூட்டில் ஈயரசி இன்மை ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும். தேன் கூட்டில் ஒரு பொதுவான கொந்தளிப்பு பரபரப்பு, இரைச்சல் இவை மிகுந்திருக்கும். சில வேளைகளில் தேன் கூடு முழுவதிலுமே இத்தகைய சூழ்நிலை நிலவியிருக்கும். அல்லது ஒரு பகுதி மட்டுமே கொந்தளிப்புக் காட்டப்பட்டிருக்கும். ஈயரசியாகிய தாயைக் காணாத ஈக்கள் பரபரப்போடு வெளிவந்து, கூட்டின் மேற்புறத்திலும், பக்கச்சுவர்களிலும், காற்றுவாரிகளிலும் தேடித் தேடி அலையும். கூட்டைச் சுற்றி 'அம்' என்ற ஒலியுடன் தேடுவதில் அவை முனைந்திருக்கும். அவற்றினுடைய அழுகை, துயரம் சான்றதாக இருக்கும். இந் நேரத்தில் தேனீ வளர்ப்பவர்கள் கூட்டருகில் சென்றுவிட்டால் போதும். ஈக்கள் தம் தாயைத் தேடுமுகத்தான் அவ

ருடைய நெற்றியை நெருங்குகின்றன. அவருடைய கண்கள், காதுகள், தாடை ஆகியவற்றின்மீது தேடுவது, தம் காணுமற் போன தாயைப்பற்றி ஏதாகிலும் செய்தியை அவர் தருவாரா என்று எதிர்பார்ப்பன போன்று காணப்பெறும். மற்றும் அவருடைய உடலைச் சுற்றிப் பறந்து கை கால்களை நெருங்குவது, அவனை எவ்வா றேனும் காணல் வேண்டும் என்ற ஆர்வ முயற்சியைக் காட்டுவ தாகும். தேடுகின்ற பணியில் ஈடுபட்டுள்ள உழைக்கும் ஈக்கள் தேன் திரட்டச் சென்று திரும்பி வரும் ஈக்களை ஆர்வத்தோடு அணுகி, ஏதாகிலும் தம் தாயைப் பற்றிய செய்தி கிடைக்குமா என்று அறிந்து கொள்ளத் துடிக்கும்.

ஈயரசி கருவூட்டப் பெற்ற பின்பு, கூட்டில் ஓர் ஈயரசி தோன் றினுலொழிய அது கூட்டைவிட்டு எப்போதும் வெளிச்செல்வதில்லை. பூந்தாதுக்களையும், தேனமிழ்தத்தையும், அது நேரடியாகப் பெறுவ தில்லை. உழைக்கும் ஈக்கள் தம்மிடத்தே சுரக்கும் ஒரு சுரப்பியின் வழியாகவே அவற்றை ஈயரசிக்கு உண்பிக்கின்றன. தனிச் சிறப் பியல்பும் மிகையான வேறுபாட்டியக்கமும் கொண்ட இவ் ஈ, நெடுங் காலமாகவே 'ஈயரசி' என்று பொருத்தமற்ற முறையில் அழைக்கப் பெற்று வருகின்றது. அது கூட்டில் பிற ஈக்களுக்கு எவ்வகைக் கட்டளையும் இடுவதில்லை. கூட்டின் இயக்க முறைமைக்கு மறைமுக மாக உதவுகின்றது. கூட்டில் இனப்பெருக்கக் கருவியாக இயங்கு கின்றது.

உழைக்கும் (வேலைக்கார) ஈக்கள்: உழைக்கும் ஈக்களின் முட்டை -கள் மூன்று நாட்களில் பொரிக்கின்றன. முட்டைப் புழுக்கள் மூன்று நாட்களுக்குச் சிறப்புப் பாகினுலும், அடுத்த மூன்று நாட்களுக்கு ஈயுணவினுலும் (Bee-Bread) உண்பிக்கப் பெறுகின்றன. பின்பு அவை இடப்பெற்றுள்ள கண்ணறைகள், மெழுகினுலான துளைக ளுள்ள மூடிகளால் மூடப்பெறுகின்றன. முட்டையிடப் பெற்ற 21-ஆம் நாள் முட்டைப்புழு, முழு வளர்ச்சியடைந்த ஈயாக மூடியைத் தள்ளிக்கொண்டு வெளிவருகின்றது. வெற்றுக் கண்ணறைகள் உழைக்கும் ஈக்களால் மீண்டும் முட்டையிடுவதற்குத் தகுதியா யிருக்குமாறு துப்புரவு செய்யப் பெறுகின்றன. கண்ணறைகளி னின்றும் வெளிவந்த மறுநாள் முதற்கொண்டே உழைக்கும் ஈக்கள் கன்னித் தாய்ச்சி ஈக்களின் கடமைகளை மேற்கொண்டு பணியாற்று கின்றன. இவை தேனடையில் ஒரு தனிச் சிறப்புடைய கூட்டமாகத்

திகழ்கின்றன. உழைக்கும் ஈக்கள் யாவும் பெண்ணின ஈக்களே. இவை தேன் கூட்டின் நுழைவாயில் அருகில் அமர்ந்து தேன் கூட்டைப் பகைவர்கள் நெருங்காதவாறு காவல் புரிகின்றன. தேன் கூட்டைச் சீர் திருத்துகின்றன. அழுக்குகள், கழிவுகள், இறந்துபோன ஈக்கள், அல்லது முட்டைப் புழுக்கள் ஆகியவற்றை அகற்றுகின்றன. கூட்டை நேர்த்தியாகவும், செப்பமாகவும் தூய்மையாகவும் வைத்திருக்கின்றன.

தேன் கூட்டிலுள்ள கண்ணறைகளைத் தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்கின்றன. அவற்றை அவ்வப்பொழுது சரிபார்க்கின்றன. பழுதுறுங்கால் பழுதுபார்க்கின்றன. ஓர் ஊசியைக் கூட்டிற்குள் நுழைத்துவிட்டால், அவ்வூசியால் கண்ணறைகளின் மீது உண்டாக்கப்பெற்ற துளைகளின் வழியே கண்ணறைச் சுவரை வெட்டி, அவ்வூசியை வெளியே எடுத்துவிடுகின்றன. பின்பு மீண்டும் மெழுகைக் கொண்டு துளைகளை அடைத்துச் சீர்செய்துவிடுகின்றன.

குடியேற்ற நேரங்களிலும், வேறெவ்வகைக் கரணியங்களினுலோ கூட்டில் ஈயரசி இல்லாத வேலைகளிலும் இவ்வுழைக்கும் ஈக்கள், கன்னிமை ஈயரசியைப் பேணி வளர்க்கின்றன. தேன் கூட்டைக் கட்டுவதற்கான மெழுகைத் தோற்றுவிக்கின்றன. கூட்டின் தட்ப வெட்ப நிலையைச் சீராக வைத்திருக்கின்றன. உழைக்கும் ஈக்களின் வாழ்நாள் இயல்பாக மூன்றரை மாதங்களாக உள்ளது. தேன் திரட்டும் காலங்களில் ஒன்றரை மாதங்களாகக் குறைந்துவிடுகின்றது. இக் காலங்களில் மிகையான உழைப்பினுல் ஏற்படும் அயர்ச்சியினுல் விரைவிலேயே மடிந்து போகின்றன.

உழைக்கும் ஈக்கள் கருக்கொள்வதில்லை. ஆனுல் தேன் கூட்டில் ஈயரசியற்ற நிலைகளிலும், ஈயரசியைத் தோற்றுவிக்கக்கூடிய முட்டைகளோ அல்லது முட்டைப் புழுக்களோ இல்லாத பொழுதும், ஈயரசியின் முழு வளர்ச்சிக்குக் காலத் தாழ்த்தம் ஏற்படும் பொழுதும், சில உழைக்கும் ஈக்கள் ஈயரசியின் தாய்மைப் பொறுப்பை மேற்கொண்டு முட்டைகளை இடத் தொடங்குகின்றன. முட்டையிடும் ஈக்கள் ஒரு கண்ணறையில் பல முட்டைகளை ஒழுங்கின்றி இடுகின்றன. இவற்றைக் கன்னித் தாய்ச்சி ஈக்கள் கண்ணறைக்கு ஒன்ருக அமைத்து மிகுந்தவற்றை அகற்றிவிடுகின்றன.

கருவூட்டப் பெருத உழைக்கும் ஈக்கள் இடுகின்ற முட்டைகளி லிருந்து, உழைக்காத ஈக்களைத் (சோம்பேறி) தவிர, பிற ஈக்கள் தோன்றுவதில்லை. கன்னிமை ஈயரசியின் வருகை உழைக்கும் ஈக்கள் முட்டையிடுவதை நிறுத்துகின்றது. சில வேளைகளில் உழைக்கும் ஈக்களின் இவ்வருவருக்கத் தக்க செயல், கன்னிமை ஈயரசி கருவூட் டப்பெற்று முட்டையிடத் தொடங்கிய பின்பும் நிகழும்.

உழைக்கும் ஈயின் பின்னங் கால்கள் ஒவ்வொன்றின் மேலும், ஒரு தூரிகை (Brush) பூந்தாதைச் சேர்ப்பதற்கும், ஒரு கூடை அதைச் சுமந்துகொண்டு கூட்டிற்கு வருவதற்கும் உள்ளன. கூடைகள் விறைப்பான மயிர்க்கற்றை விளிம்புகளை உடையன. இவற்றின் வயிற்றின்மீது, கூடுகட்டும் மெழுகைத் தட்டையாக வெளித்தள்ளும் பைகள் உள்ளன. உழைக்கும் ஈ மணம் பொருந்திய மலர்களின் தேனமிழ்தத்தைக் கொண்ட கிண்ணத்தினுட் சென்று தேன் திரட்ட வல்லது.

உழைக்கும் ஈக்கள், தம் முற்பகுதி வாழ்நாளில் தேன் கூட்டி னைச் சார்ந்த உண்முகப் பணிகளிலும் (Indoor works) பிற்பகுதி வாழ்நாளில், கூட்டைவிட்டு வெளிச்சென்று, தேன், பூந்தாது, நீர் இவற்றைக் கொணரும் புறப்பணிகளிலும் (Outdoor works) ஈடுபடு கின்றன. சுறுசுறுப்புள்ள ஒரு தேனீ, தன் வாழ்நாட் காலத்தே ஒரு தேக்கரண்டி அளவுள்ள தேனைத் திரட்டுகின்றது என மதிப்பிட் டிருக்கின்றனர். மேலும் ஒரு கையெடை (பவுண்டு) அளவுள்ள தேனைத் திரட்ட அது மூன்று கற்றெலைவுள்ள இடத்தை 40000 முறை சென்று மீளல் வேண்டுமென்றும், அல்லது இவ்வுலகின் நடு நிலக் கோட்டினூடே 5 முறை சுற்றிவரும் தொலைவினைக் கடத்தல் வேண்டுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றினுடைய வாழ் நாட்பேரெல்லை 57 நாட்களாகும். உணவில்லாமல் இவை நான்கு மணி நேரத்திற்குமேல் உயிர்வாழா.

உழைக்கா (சோம்பேறி) ஈக்கள்: உழைக்கா ஈக்கள் எனப் பெறுபவை யாவும் ஆண் ஈக்களே. அவற்றின் தொழில் கன்னிமை ஈக்களுக்குக் கருவூட்டுதலே. இத் தேவையைக் குறித்தே அவை தேன் கூட்டில் இருப்பதைப் பிற ஈக்கள் பொறுத்துக் கொள்கின் றன. அவற்ருல் தேன் திரட்டுதல் இயலாது. ஆனுல் உழைக்கும் ஈக்களால் திரட்டப்பெற்றுக் கண்ணறைகளில் வைக்கப் பெற்றுள்ள தேனை உண்டு வாழ்கின்றன. குடியேற்ற நேரங்களில் அவை

கூட்டைவிட்டு விரட்டப்பெறுகின்றன. அல்லது கொல்லப்பட்டோ அன்றிச் சிதைக்கப்பட்டோ அழிக்கப்படுகின்றன. இவற்றின் வாழுங் கால அளவு நான்கு மாதங்களாகும். இவை எக்கூட்டிலும் செல்லும் திறத்தன.

உழைக்கா ஈக்களின் முட்டைகளும், உழைக்கும் ஈக்களின் முட்டைகளைப் போன்றே பொரிக்கப்பெற்றுக், கண்ணறைகளில் வைக்கப்பெற்றுக், கன்னித் தாய்ச்சி ஈக்களால் பேணிக்காக்கப்பெற்று 25-ஆம் நாளில் ஈக்களாகக் கூட்டைவிட்டு வெளி வருகின்றன. இரண்டு கிழமைகட்குப் பிறகு கன்னிமை ஈயரசியை நாடிக் கூட்டை விட்டுப் பறந்து செல்கின்றன. தனி முயற்சியை மேற்கொண்டு எக்கூட்டில் ஈயரசி இல்லை அல்லது கன்னிமை ஈயரசியின் கூடு எது என்பனவற்றைத் தெரிந்து கொள்கின்றன. கூட்டின் நுழை வாயிலில் உள்ள ஈக்களைப் பொருட்படுத்தாமல் கூட்டிற்குள்ளே செல்கின்றன. கூட்டைக் காவல் செய்யும் ஈக்கள் அவற்றைத் தடுக்க மாட்டா. அவை தடுக்கப் பெறுதலும் கூடாது. ஆனால் உழைக்கும் ஈக்கள் தவறுதலாக ஒரு கூட்டிலிருந்து வேறொரு கூட்டிற்குச் செல்லுமாயின் தடுத்து நிறுத்தப்பெறும். உழைக்கா ஈக்களின் முட்டைகள் தவறுதலாக உழைக்கும் ஈக்களின் கண்ணறைகளில் இடப்பெற்றால் அவற்றிலிருந்து வெளிவரும் ஈக்கள் சிறியவையாக இருக்கின்றன.

கூட்டில் உள்ள ஆண் இன உழைக்கா ஈக்கள், உழைக்கும் பெண் இன ஈக்களின் உழைப்பில் வாழ்கின்றன என்பது உண்மையாயினும், அவற்றை உழைக்கா ஈக்கள் அல்லது சோம்பேறி ஈக்கள் எனப்பெறுவது எவ்வகையானும் பொருத்தமுடையது அன்று. மக்களினத்தில் உழைக்கும் தகுதி படைத்துள்ள ஒருவன் உழைக்காமல் இருப்பானாயின் அவனைச் 'சோம்பேறி' என்கின்றோம். உழைக்கா ஈக்களுக்கு நாக்குக் குட்டையானதால், அவை பூக்களிலிருந்து தேனைத் திரட்டுதல் இயலாது. மேலும் தேன் கூட்டிற்குத் தேனைக் கொண்டுவரும் தேன் பைகளையும் அவை பெற்றிருக்கவில்லை. மெழுகைச் சுரப்பிக்கும் சுரப்பிகளும் அவற்றிற்குக் கிடையா. கொடுக்குகளும் இல. அவற்றின் எடைமிகுந்த உடலமைப்பு கன்னிமை ஈயரசியைக் கருவூட்டுதலுக்கென்றே தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. கருவூட்டப்பெற்ற ஈயரசி இல்லையெனில் தேன் கூடே இல்லை. ஈயரசி கருவூட்டப்பெற உழைக்கா ஈக்கள் தேவை. ஆகவே உழைக்கா

ஈக்கள் தேன் கூட்டின் வாழ்வியல் முறைக்கு இன்றியமையாதனவாகின்றன. ஈயரசியுடன் வானில் பறக்கும்பொழுதே அவை புணர்ச்சியை மேற்கொள்ளுகின்றன. இச் செலவு முடியும்பொழுது உழைக்கா ஈக்களின் வாழ்வும் முடிவுறுகின்றது. அவற்றினுடைய ஆண் உறுப்பு ஈயரசியுடன் கொண்ட தொடர்பால் அறுபட்டு அதன் உடலிலேயே சென்றுவிடுவதால் இத்தகைய முடிவு அவற்றிற்கு ஏற்படுகின்றது. ஆயிரக்கணக்கான உழைக்கா ஈக்களில் ஒன்றே ஒன்று-தான் ஈயரசியுடன் தொடர்பு கொள்ளுகின்றது.

தேனடை: தேனடை முழுவதும் மெழுகினால் ஆனது. பூந்தாதைத் (Pollen) திரட்டுவது போன்றே ஈக்கள் நீரில் கரையாத, ஒட்டும் தன்மையுள்ள, ஒருவகைத் தேன் பிசினையும் திரட்டுகின்றன. அதனுடன் தம் வயிற்றில் சுரக்கின்ற மெழுகையும் சேர்த்தே அவை தேன் கூட்டை அமைக்கின்றன. தேன் கூட்டைக் கட்டுவதில் ஒரு கையெடை (பவுண்டு) எடையுள்ள தேன் மெழுகைத் திரட்டுவதற்குப் பத்துக் கையெடை எடையுள்ள தேனைத் தேனீக்கள் உட்கொள்ளுகின்றன. ஒவ்வொரு தேன் கூட்டிற்கும் ஒவ்வொரு வகை வாடையுண்டு. தேனீக்கள் தேன்கூட்டின் வாடையைக் கொண்டே தங்கள் கூடு எது என்பதைக் கண்டு கொள்கின்றன. முதிர்ந்த, உழைக்கும் ஈக்கள் பிற கூடுகளில் நுழையும் பொழுது, அவை கொள்ளைக்கார ஈக்களாகக் கருதப்பெற்று, புதிய கூட்டிலுள்ள ஈக்களால் கொன்றழிக்கப்படுகின்றன. ஈக்களைச் சில காலம் தேன் கூட்டிலிருந்து தனியே பிரித்து வைத்திருந்தால் அவை தாம் சார்ந்த கூட்டின் வாயை இழந்துவிடுகின்றன. அவை மீண்டும் தம் கூட்டிற்குத் திரும்புமேயாகில் அயல் ஈக்களாகவும், கொள்ளைக்கார ஈக்களாகவும் கருதப்பெறுகின்றன. தேனீக்கள் கூட்டினை அமைக்கும் முறைமை, மாந்தன் கற்பனையைக் கவரும் பான்மையது. ஒரு கண்ணறையின் குறுக்களவே கண்ணறைகளின் அமைப்பிற்கு அளவீடாகக் கொள்ளப் பெறுகின்றது.

உழைக்கும் ஈக்களின் கண்ணறைகள் தேனடையிலேயே சிறியனவாகக் காணப்பெறும். தேன் மிகையாகக் கிடைக்கும் காலங்களில் தேனைச் சேர்த்துவைக்க இவை பயன்படுகின்றன.

உழைக்கா ஈக்களின் கண்ணறைகள், உழைக்கும் ஈக்களின் கண்ணறைகளைப் போன்றிருந்தாலும், அளவில் சற்றுப் பெரியவை. இயல்பாகவே அவை தேனடையின் அடிப்பகுதியில் அமைக்கப்

பெறுகின்றன. சில வேளைகளில் தேன் கூட்டின் பக்கங்களிலும் நடுவிலும் அமைக்கப்பெறுகின்றன. பெரும்பாலும் குடியேற்றக் காலங்களிலேயே அமைக்கப் பெறுகின்றன.

ஈயரசியின் கண்ணறைகள், மெழுகுக் கலவை, பூந்தாதுக்களின் சேர்க்கை ஆகியவற்றால் அமைக்கப்பெறுகின்றன. மற்றக்கண்ணறை களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டே காணப்பெறுகின்றன. தேனடையின் ஓரத்தில் அடிப்பக்கத்தில் கட்டப்பெறுகின்றன. பக்கங் களிலும், முகப்பிலும் சில வேளைகளில் அமைக்கப் பெறுகின்றன. இவை வட்டமாகவும், நீண்டும் முன்பகுதி சற்றுக் கூட்டிற்கு வெளியே நீட்டிக்கொண்டும், நுழைவாயில் கீழ்ப்புறம் நோக்கியும் இருக்குமாறு அமைக்கப்பெறுகின்றன. இவையும் குடியேற்றக் காலங்களிலேயே கட்டப் பெறுகின்றன.

ஈக்களின் பொதுத் தன்மைகள்: தேனீக்களால் நடக்கவும் இய லும். அவை பின் நோக்கியே பறக்கவும் கூடும். தேன்கூடு புதிய இடத்திற்கு மாற்றப்படும்பொழுது அவை அதைச் சுற்றி வட்டமிட் டுப் பறந்து திரியும். அப்பொழுது அவை தேன் கூட்டைப் பார்த்த வாறே பின்நோக்கிப் பறந்து நகரும். அப்பொழுது அவை தேன் கூட்டின் அமைப்பிடத்தையும், பிற சுற்றுச் சூழல்களையும், அடையா ளங்களையும் மிக்க உன்னிப்பாக அறிந்து கொள்கின்றன.

தேனீக்கள் மிகவும் குறுகிய பார்வையுடையவை. அவை மாந்தனை முழுமையாகப் பார்த்தல் இயலாது. அவன் அவற்றிற்கு ஒரு மிகப் பெரிய தெளிவில்லாத, முடை நாற்றம் வீசும் ஒரு பொரு ளாகவே காட்சியளிக்கின்றான். அவன் மீது வீசுகின்ற அந்த முடை நாற்றமே தேனீக்கள் கிளர்ந்தெழுந்து சினமுற்றுக் கொட்டுதலுக்கு வழிவகுக்கின்றது. ஆகவே தேனீ வளர்ப்பவர்கள் கூட்டினை அணு குங்கால் தூய்மையுடனும் வெள்ளுடை அணிந்தும் செல்கின்றனர். மேலும் அவற்றின் தேவையறிந்தும் நடந்து கொள்கின்றனர். தேனீ வளர்ப்பவர்களில் எவரேனும் தம்மைத் தேனீக்கள் கொட்டுவதில்லை என்று கூறுவாராயின் ஒன்று அவர், அவற்றின் கொட்டுதலுக்கு முன்னெச்சரிக்கையாகவோ அன்றிக் கொட்டப்பெறும் நிலையினைத் தவிர்ப்பவராகவோதான் இருத்தல் வேண்டும்.

தேனீக்கள் பறக்கும் விரைவு மணிக்கு 15 அல்லது 20 கற்களா கும். பூந்தாதுக்களையும், தேனையும் சுமந்து வருங்கால் அவற்றின்

விரைவு 5 முதல் 12 கற்களாகும். மிக விரைவாகப் பறக்கும்பொழுது கூட தேனீக்கள் திடுமென நிற்கும் ஆற்றல் சான்றவை. அவை அலையைப்போன்று மேலும் கீழுமாக வளைந்து வளைந்து, நடமிடுவது போன்று பறப்பதை நாம் காணலாம். தேனீக்கள், தம்மால் இயலுமாயினும், குன்றுகளின்மீது பறந்து செல்வதை விரும்புவதில்லை. ஆனால் அவை சுற்று வழியில் செல்வதையே மேற்கொள்ளுகின்றன.

கொடுக்கின் நுண்ணியக்க அமைப்பில் நாம் வியப்புக்குரிய மாறுதலைக் காண்கின்றோம் உழைக்கும் ஈ ஓர் உறையினுள் ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கப் பெற்றிருக்கும் இரு கூர்மையான ஈட்டி முனைகளையுடைய ஒரு நேரான கொடுக்கைப் பெற்றிருக்கின்றது. அஃது உந்தித்தள்ளும் முறையில் செயற்படுகின்றது. ஈட்டி முனைகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளியே வந்து, கொட்டப்பட்ட புண்ணில் பாய்ந்து அதில் புதைகின்றன. கொடுக்கு மிக வன்மையும் கூர்மையும் உடையது. அஃது ஈயினுடைய மிக்க முயற்சியினால் வெளியில் தள்ளப்பெறும் பொழுது குடலின் ஒரு பகுதியையும், உடன் கொண்டு வருகின்றது. இதனால் ஈ மூன்று மணி நேரத்திற்குள் இறந்து போகின்றது.

உழைக்கும் ஈக்களுக்குக் கொடுக்குகள் இல. ஈயரசி தன்னகத்தே புண்ணிலிருந்து மிக எளிதில் அகற்றிக்கொள்ளக் கூடியதும், சற்று வளைந்திருக்கக் கூடியதுமான ஒரு கொடுக்கினைப் பெற்றிருக்கின்றது. அஃது எப்போதும் இழக்கப் பெற வேண்டியதில்லை. இதனுடைய முழுமையான வினைப்பாடும் போட்டி ஈயரசிகளைக் [Rivals Queens] கொல்வதற்கே.

தேனீக்களின் நஞ்சு தடித்து நீர்மம் [Fluid] போன்று இருக்கும். வியப்பான மணமும் கொண்டிருக்கும். அது சங்கிலிக் கருப்பன் என்னும் பாம்பின் நஞ்சு வகையைச் சார்ந்தது. ஈ, எவ்வளவுக் கெவ்வளவு சினமுற்றிருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நஞ்சினுடைய கடுமையும் மிகையாக இருக்கும்.

செய்திகளையும் எண்ணங்களையும் ஈக்கள் தங்கள் தனித்தன்மை வாய்ந்த கூத்தின் மூலமே பிற ஈக்கட்கு அறிவிக்கின்றன. வட்டமான கூத்தும், விரைவாக ஆடும் கூத்தும், உணவு அருகில் உள்ளது என்பதையும், பக்கவாட்டத்தில் நகர்ந்து ஆடுகின்ற கூத்து உணவு தொலைவில் உள்ளது என்பதையும் குறிக்கின்றன. உணவு எவ்வளவு

தொலைவில் உள்ளது என்பதை மட்டுமல்லாது எத்திசையில் உள்ளது என்பதையும் குறிக்கின்றன. இச் செய்தி நம்புதற்கரிதாயுள்ள தெனினும், "காரல் ஃபிரிச்" என்பவரால் நன்கு கூர்ந்து கவனிக்கப் பெற்ற பின்பும், சில ஆய்வுகள் நிகழ்த்திய பின்பும் கண்டறியப் பெற்ற உண்மைகளாகும்.

கூத்திடும் தேனீக்களைக் கவனிக்கின்ற பிற ஈக்கள், மற்றொரு செய்தியையும் அவற்றிடமிருந்து அறிந்து கொள்கின்றன. அது தம்முடைய நீண்ட செலவிற்கு எரிபொருளாகத் தேவைப்படும் கனிச்சருக்கரையின் [Glucose] அளவு எவ்வளவு என்பதாகும். தேனீயை ஒரு வகையில் மிகையான கனிச்சருக்கரையைப் பயன்படுத்தும் சிக்கனமற்ற பறக்கும் பொறி [Flying Machine] என்றே கூறலாம். ஆகவே அது தன்னுடைய நீண்ட செலவிற்கு, அஃது இடையிலேயே தடைபட்டுப் போகா வண்ணம், போதுமான அளவு எரி பொருளை எடுத்துச் செல்லுகின்றது.

தேனீக்களானவை மலர்கள் முழு நிறைவுடன் பூத்துக் குலுங்கும் இளவேனிற் காலத்திற்குள் ஓராண்டின் பணியினை முடித்தல் வேண்டும். தேன் திரட்டப்பெறும் காலந்தான் தேனீக்கள் குடியேற்றக் கூடுகளை அமைக்கும் நேரமாக அமைந்துள்ளது. தேன் கூட்டில் ஈக்களின் எண்ணிக்கை மிகுவதினாலும், புதியதான ஈயரசி தோன்றுவதினாலும், அவற்றினின்று பிரிந்து போகவேண்டும் என்ற இயற்கையான உணர்வுத் தூண்டுதலினாலுமே அவ்வகைக் கூடுகள் உலகெங்கணும் அமைக்கப் பெறுவதற்குக் கரணியங்களாக உள்ளன. 0

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	9 உருபா.	10-50 உருபா	13 உருபா.
அரையாண்டுக் கட்டணம்	5 உருபா.	6 உருபா.	7 உருபா.
தனி இதழ்:	75 காசு	90 காசு.	1 உருபா.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

திணிப்பதாமோ?

[மணிவேலன்]

அரிசியுண உண்பவரைக் கோதுமையில் செய்திட்ட
அப்பந் தன்னை
விரும்பவில்லையென்றாலும் உண்ணென்றால்—, மரக்கறியே
விரும்பி யுண்ணும்
ஒருவனைப்போய்ப் புலாலுணவை வலிந்துண்க வெனச்சொன்னால்—
உளம்வி ரும்பா
ஒருத்திக்குப் பிறனொருவன் மணமகனாய் வேண்டுமென்றால்—,
''ஓகோ வீணாய்த் 1

திணிக்கின்றார்! திணிக்கின்றார்!'' என்பதிலே பொருளுண்டு!
சிறிது கூட
நுணங்கியவோர் அறிவின்றித், தமிழ்மொழியைத் தாய்மொழியாய்
நேர்ந்த பேர்க்கு
வணங்குதற்கே உரியதமிழ் மொழியினிலே கற்பதற்கு
வாய்ப்பை ஈந்தால்
''திணிக்கின்றார் தமிழ்மொழியை!'' என்கின்ற பேரெல்லாம்
சிறியர் அன்றோ? 2

அழும்போதே ''அம்மா!''வென் றழுதழுது தமிழ்கற்றும்,
ஆளா கிப்பின்
எழில்மனையா ளுடன்கொஞ்சும் போதெல்லாம் ''கண்மணியே!''
எனம கிழ்ந்தும்
பொழுதெல்லாம் தமிழ்பேசி உயிரெல்லாம் தமிழாஇவ்
வுலகில் வாழும்
செழுந்தமிழப் பிள்ளைகள் தமிழினிலே கற்பதெனில்
திணிப்ப தாமோ? 3

உள நூலில் வல்லவர்கள் உரைக்கின்றார் : ''வேற்றுமொழி
யொன்றில் ஆற்றல்
வளம்பெற்று விரைவாகப் பேசிடினும், தாய்மொழியில்
மனத்தில் எண்ணி
வளர்ந்திட்ட ஆற்றலினால் விரைவாக மொழிபெயர்க்கும்
வன்மை யன்றிக்
கிளர்கின்ற எண்ணமே பிறமொழியில் தோன்றுவதே
கிடையா'' தென்று! 4

பன்மொழியில் வல்லவனைப் பளாரென்று தாடையிலே
பதறப் போட்டால்
என்னமொழி பேசியவன் அழுதிடுவான்? உணர்வோடே
இணைந்திருக்கும்
தன்னுடைய தாய்மொழியில் பேசியவன் அழிதிடுவான்!
சற்றே ஐயம்
உன்னிடத்தில் இருந்தாலே "திணிப்பென்போன்" தாடையிலே
ஓங்கிப் போடு! 5

'அம்மா'வென் றவனழுவான்; "அடே, பயலே! திணிப்பென்றே
அன்று சொன்னாய்;
உம்மீது யான் திணிக்க வில்லையே; தமிழினிலே
ஓல மிட்டாய்!
வம்பினை நீ விலைகொடுத்து வாங்காதே! நீட்டுகின்ற
வாலைக் கொஞ்சம்
இம்மென்னும் முன்பாகச் சுருட்டிக்கொள்! இல்லையெனில்
இழிந்து போவாய்!" 6

எனக்கடிந்து விரட்டுக நீ! "இந்நாட்டில் இருந்துகொண்டே
எம்மொழிக்கு
நினைக்கின்றாய் கெடுதியினை! நீகெடுவாய்!" எனச்சொல்லி
நெறிப்படுத்து!
கனைக்கின்ற குதிரையும் தன்மொழியில் கனைக்கிறது!
கழுதை கூட
உனக்காக உன்மொழியில் கத்தவில்லை! தன்மொழியில்
ஓங்கிக் கத்தும்! 7

'ஆங்கிலத்தில் கற்றால்தான் அறிவுவரும்' என்கின்ற
"அசட்டுக் கொள்கை"
ஏங்கானம் யாரேனும் ஏற்பாரோ? 'மொழியென்றால்
எண்ணந் தன்னைத்
தாங்குகின்ற கருவி'யெனச் (Language is a vehicle of thought)
சொல்கின்ற மொழியறிஞர் தங்கருத்தை
நீங்களெலாம் அறியாது நினைத்ததெலாம் பேசுவது
நேர்மை யாமோ? 8

வண்டியிலே மலர்ப்பளுவை ஏற்றிடினும் அதுசுமக்கும்!
மலத்தை நீவிர்
கொண்டுவந்து போட்டாலும் அதுசுமக்கும்! வண்டியின்மேல்
குற்ற மில்லை!
வண்டியிலே சுமையேற்றும் மாந்தன்மேல் குற்றமன்றோ?
மடமை பேசி
வண்டமிழ்மேல் குற்றத்தைச் சுமத்தாதீர்! மாணவர்கள்
மயங்க மாட்டார்! 9

'மருத்துவத்தை ஆங்கிலத்தில் பயின்றால்தான் பீகாராம்
மாநிலத்தில்
இருந்துபணி யாற்றுவது கூடு'மெனும் கொள்கையினை
யாரே ஏற்பர்?
வருந்துகின்ற நோயாளி ஆங்கிலத்தை அறிந்தவனாய்
வருவ துண்டோ?
பருந்துக்குப் பரிவுகோழிக் குஞ்சின்மேல் வருவதுண்டோ?
பசப்ப வேண்டா! 10

தனித்தமிழ் வளர்க்கும் புதிய ஏடு.

அறிவு

திங்கள் ஏரிதழ்.

ஆசிரியர் : பேரா. மு. தமிழ்க் குடிமகனார். க. மு.

தனியிதழ் 25 காசு. ஆண்டொப்பம் 6-00.

தேவைக்கு எழுதுக.

அறிவு

அல்லி அச்சகம், கோரிப்பாளையம்-மதுரை-2.

உ. த. க. விற்கென ஒரு கொள்கை முரசம்

முதன் மொழி

ஆசிரியர் : பேரா. தி. வை. சொக்கப்பனார், க. மு.

தனியிதழ்: 20 காசு. ஆண்டொப்பம்: 2-50.

முதன்மொழி

'தமிழ்க்குடில்', அளகாபுரம், சேலம்-4.

மடக்கை*
(Logarithm)

இல. க. இரத்தினவேல், க. மு.

$$\frac{70 \times 22 \times 437 \times 0.002497 \times (4321)^3}{8769 \times 98765.9 \times 0.13273 \times 8}$$

இதன் விடையை ஒரிரு நிமையங்களுக்குள் கூற இயலுமா? இதனைப் போன்ற சிக்கலான கணக்குகளுக்கு எளிய முறையில் தீர்வு கூறும் பல்வகைக் கணித முறைகளுள் மடக்கை (Logarithm) என்பது நாடோறும் பயன்படுத்தப்பெறும் மிக இன்றியமையாத ஒன்றாகும். இக்கணித முறையில் பலவகையான நீண்ட பெருக்கற் கோவைகளின் மதிப்பையும், பலபடி (powers), பலபடி மூலங்களையும் (Power roots) எளிதே காணலாம். ஆகையால் இக்கணித முறை மாணவர்களுக்கு மட்டுமன்றி வணிகர்களுக்கும் ஏனைக் கணக்கர்களுக்கும் பயன் தரத் தக்க தொன்றும்.

மடக்கையின் இலக்கணம் :

நிலைத்ததோர் அடிப்படை எண்ணின் படியெண்,
விளைத்ததன் மதிப்பின் மடக்கையாம் என்ப[1]
இயல்பொது எனவவற் றுள்ளிரு பிரிவே

அஃதாவது குறித்த நிலையானதோர் அடிப்படை எண்ணின் படியெண் (Power) அஃதுண்டாக்கும் எண் மதிப்புக்குரிய மடக்கையாகும். 10 என்ற குறித்த நிலையானதோர் அடிப்படை எண்ணின் படியெண் 3 எனில், இந்த 3, இஃதுண்டாக்கும் எண் மதிப்பான ஆயிரத்துக்கு மடக்கையாகும்.

$$1000 = 10^3$$

என்பதில் பத்தின் அடி(ப்படை)யில் ஆயிரத்துக்கான மடக்கை 3 ஆகும். இதனைக் குறியீட்டில்

---

*படியம் படிமியம் என்றும் கூறுப.

1. Logarithm is power of a fixed number (called the base of the system usually 10 or e) that equals the number in question—Chambers 20th Century Dictionary.

மகை$_{10}$ $1000=3$ என்றோ

அன்றிக் குறிப்பிட்டதோர் அடியை மட்டும் கருத்திலிருத்தும் பொழுது அடியை நீக்கி,

மகை $1000=3$ என்றோ எழுதலாம்.

மடக்கைகளுள் பொது மடக்கை (Common logarithms) இயல் மடக்கை(Natuaral logarithms)என இருபெரும் பிரிவுகள் உள்ளன. பத்தை அடியாகக் கொண்ட மடக்கை பொது மடக்கை எனவும், 2.718...என்னும் தோராய மதிப்புள்ள (e என்னும்) கற்பித எண்ணை அடியாகக் கொண்ட மடக்கை இயல் மடக்கை எனவும் வழங்கப்பெறும். பொதுப்படையான கணக்குகளுக்கு மிகப் பயன் படுவது பத்தை அடியாகக் கொண்ட பொது மடக்கையேயாம்.

இம் மடக்கையின் பயன்களாவன :

பல எண்களின் பெருக்குத் தொகையைக் காண அவற்றின் மடக்கைகளைக் கூட்டி எதிர் மடக்கை கண்டால் போதும்.

மகை $(715\times617\times8298)=$ மகை $715+$ மகை $617+$ மகை 8298.

இரு எண் தொகுதிகளின் வகு பலனைக் காணத் தொகுதியின் மடக்கையிலிருந்து பகுதியின் மடக்கையைக் கழித்து எதிர் மடக்கை காண வேண்டும்.

$$\text{மகை}\left[\frac{63\times247\times7798}{1369+7\times67}\right]=[\text{மகை } 63+$$

$$\text{மகை } 247+\text{மகை } 7798]-[\text{மகை } 1369+\text{மகை } 7+\text{மகை } 67]$$

ஒரு பலபடி எண்ணின் மடக்கை, எண்ணின் மடக்கையைப் பல படியால் பெருக்குவதாகும்.

மகை $[2346]^4 = 4\times$ மகை (2346)

இங்ஙனமே, மகை $\sqrt[3]{4374}=$ மகை $(4374)^{1/3}=\frac{1}{3}$ மகை 4374

கூட்டலும் கழித்தலும் எளிதான முறைகள் ஆதலால் இக்கணித முறையும் எளிதானதே. இம்முறையில் ஓரெண்ணின் மடக்கையைக் காணுதல் இன்றியமையாததால் மடக்கை காணும் முறையைத் தெளிவாக அறிய வேண்டும்.

பத்தின் மடக்கைகளாவன :

எண்	பத்தின் படியில்	மடக்கை	எண்		பத்தின் படியில்	மடக்கை
1	10^0	0				
10	10^1	1	0.1	= 1/10	10^{-1}	$\bar{1}$
100	10^2	2	0.01	= 1/100	10^{-2}	$\bar{2}$
1000	10^3	3	0.001	= 1/1000	10^{-3}	$\bar{3}$
10000	10^4	4	0.0001	= 1/10000	10-	$\bar{4}$
100000	10^5	5	0.00001	= 1/00000	10^{-5}	$\bar{5}$

பின்னர்க் காணப்போகும் மடக்கைப் பின்னப் பகுதி எப்பொழுதும் நேர் எண் (+Ve No.) ஆதலால், அதனின்றும் வேறுபடுத்துவதற்காக ஒன்றின் கீழுள்ள எண்களின் மடக்கைகளான —1, —2...... என்பனவற்றை $\bar{1}$, $\bar{2}$ என எழுத வேண்டும். இதனைக் கூறும்போது கோட்டு ஒன்று (bar one) கோட்டிரண்டு (bar two) எனக் கூறலாம்[2].

ஓரெண் 100க்கும் 1000க்கும் இடையில் இருந்தால் அதன் மடக்கை 2க்கும் 3க்கும் இடையிலிருக்கும். 234.56 என்ற ஓர் எண்ணைக் கருதினுல், இவ்வெண் 234க்கும் 235க்கும் இடைப்பட்ட—அஃதாவது நூறுக்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட—எண். எனவே இவ்வெண்ணின் மடக்கை.

2 + ஒரு பின்னப் பகுதி

யாகும். 2 என்ற முழுவெண் பகுதியை மடக்கைக் குணகம் (Characteristics) என்றும் பின்னப் பகுதியை மடக்கைக் குற்றெண் (Mantissa) எனவும் கூறலாம்.

மேற் குறித்த குணகம் தான் ஓரெண் பத்து வரிசையிலுள்ள எண்ணு, நூற்று வரிசையில் உள்ள எண்ணு என்றும் பிறவும் ஒன்றன்கீழ்ப் பத்து வரிசையிலுள்ள எண்ணு, ஒன்றன்கீழ் நூற்று வரிசையிலுள்ள எண்ணு என்றும் பிறவும் தீர்மானிக்க உதவுவது. ஒன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட எண்களிலும், எண்ணில் எத்தனை எண்ணிடங்(digits)கள் உள்ளனவோ அவற்றுக்கு ஒன்று குறைவான எண்ணே அவற்றின் மடக்கைக் குணகமாம். ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட எண்களுள் புள்ளிக்கும் முதல் எண்மானத்துக்கும் (First significant figure) இடையில் எத்தனைச் சுழிகள் (Zeroes) உள்ளனவோ அவற்ருேடு ஒன்று கூடிய கோட்டெண்ணே அதன் குணகமாம். இதனைக் கீழ்க் குறிக்கும் வெண்பாவால் மனத்தில் இருத்தலாம்.

---

2. *கோட்டெண் கோடு—வளைந்த பிறழ்ந்த எண்மதிப்பில் (ஒன்றில்)கோடிய ஒன்றுக்குக் கீழான எனப் பொருள் கொள்ளலாம்.*

ஒன்றின் மிகுமெண் ணுக் கெண்ணிடத்தில் ஒன்றுகுறைந்
தொன்றின் குறையின்எதிர்ப் புள்ளியின்பின் எண்ணின்
இடையி லுளசுழியெண் ணேடொன்று கூடும்
மடக்கைக் குணகம் மதி.

மகை $234.56 = 2 +$ ஒரு பின்னப் பகுதி எனக் கண்டோம். இதி லுள்ள பின்னப் பகுதியைக் கண்டறிவதற்கான எண்–மடக்கைப் பட்டியல்கள் உள்ளன, நமது பணிக்கு நாலெண் மடக்கைப் பட்டியல்களே போதுமான நுண்மையை அளிக்க வல்லன[3]. இப்பட்டியல் உதவியால் 'நாலெண்' (Four Figures) உள்ள எண்ணுக்குத் தான் மடக்கைக் குற்றெண் காண வியலுமாதலால் 234.56 என்ற எண்ணை "நாலெண்"ணுக்குத் தோராயப் படுத்தவேண்டும். அஃதாவது 234.6.

எண்-மடக்கைப் (logarithm) பட்டியலின் நெடுக்கு ஓரத்தில் 10 முதல் 99 (தொண்பத்தொண்டு) வரை எண்ணும், குறுக்கு ஓரத்தில் 'மூவெண்' மடக்கைக் குற்றெண் காணு[illegible]தற்கான இணைவெண் 0 (சுழி) முதல் 9 (தொண்டு) வரையிலும், பின் 'நாலெண்' மடக்கைக் குற்றெண் காணுவதற்கான இடை மிச்சங்கள் (mean differances) 1 முதல் 9 வரையிலும் கொடுக்கப் பெற்றிருக்கும். காட்டுக்காக 234.6 என்ற எண்ணுக்கான பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(எண்–மடக்கைப் பட்டியல் அடுத்த பக்கம் பார்க்க)

234.6இன் மடக்கைக் குற்றெண் காணல் :

நெடுக்குக் கல வரிசையுள் ஈரிட எண்ணான 23-க்கும் குறுக்கு வரிசையில் மூவிட எண்ணான 4-க்கும் உள்ள மதிப்பு 3692; இதே வரிசையில் இடை மிச்சப் பகுதியில் நாலிட எண்ணான 6-க்குரிய மதிப்பான 11-ஐ 3692 உடன் கூட்டக் கிடைக்கும் 3703ஏ 234.6இன் மடக்கைக் குற்றெண் ஆகும்.

எனவே, மகை $234.6 = 2 + 3703$

அல்லது, மகை $234.6 = 2\,.\,3703$

இங்ஙனமே, மகை $2345\ 6 = 3\,.\,3703$

மகை $234567 = 5\,.\,3703$

மகை $2.3456 = 0\,.\,3703$

மகை $0.23456 = \bar{1}\,.\,3703$

மகை $0.023456 = \bar{2}\,.\,3703$

---

3. இப்பட்டியல்கள் அடங்கிய கணக்கியல் அட்டவணைகளுள் கிளார்க்குவின் அட்டவணையும் சேசாத்திரியின் அட்டவணையும் குறிப் பிடத் தக்கவை.

ஓரெண்ணின் ஒன்று பத்து நூற்றிடங்களைக் காட்டுவது அதன் குணகமே என முன்னர் மொழிந்தோம். எனவே வெவ்வேறு எண்களின் குணகத்தை முற்கூறியவாறு எண்ணைக் கண்டவுடன் மனத்தாலேயே குறித்துவிடலாம். பின் குற்றெண் மதிப்பை மட்டும் பட்டியலில் கண்டு குறித்துக் கொள்ள வேண்டும். இக்குற்றெண் பகுதி குறிப்பிட்ட எண்ணின் மடக்கை மதிப்பை அதன் ஒன்று பத்து நூற்றிடங்களைக் கருதாது காட்டுவதாம். எனவே 2 என்ற மடக்கைக் குற்றெண்ணும் 20, 200, 2000, 2000, 0.2, 0.02, 0.002 ஆகியவற்றின் மடக்கைக் குற்றெண்ணும் ஒரேயெண் தான். அவற்றை வேறுபடுத்துவது குணகந்தான்.

மடக்கை மதிப்புக்கு எண் மதிப்பைக் காண எதிர்மடக்கை(Antilogarithm)ப் பட்டியல்எனப்படும் மடக்கை-எண் மாற்றப்பட்டியலைப் பயன்படுத்த வேண்டும். மடக்கையை காண எவ்விதி முறைகளைப் பின்பற்றினோமோ அவற்றின் வாற்றலை (Converse-மறுதலை) முறையையே கைக்கொள்ள வேண்டும். மடக்கையின் குற்றெண் பகுதிக்கு மட்டும் எதிர் மடக்கை என்னவெனக் கண்டு, குணகத்துக்குத்தக்க எண் மானத்தை அமைக்க வேண்டும்.

எதிர்மடக் கையில்எண் மதிப்பினை
யிடுகையில்
குணகத் துடன்ஒன்று கூடும்
எண்ணிடம்;
கோட்டெண் எனில்எண்ணுக் கிடப்-
புறம் ஒன்றுகுறை
சுழிகளை யிட்டுப் புள்ளியை யிடுக!

என்றவாறு குணகத்தில் ஒன்று கூடிய எண்ணிடமும், குணகம் கோட்டெண் ஆயின். புள்ளிக்கும் முதல் எண்மானத்துக்கும் இடையில் கோட்டெண்ணில் ஒன்று குறைந்த சுழிகளும் இருக்க வேண்டும். (தொடரும்)

	0	1	2	3	4	5	6	7	8	9	இடைமிச்சங்கள் 1 2 3	4 5 6	7 8 9
22	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
23	3617	3636	3655	3674	3692	3711	3792	3747	3766	3784	2 4 6	7 9 11	13 15 17
24	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—

மெய்யறிவியல்

‘உண்மை’யும் ‘வாய்மை’யும்

—பொய்யாமொழி.

உண்மையும் வாய்மையும் ஒரே பொருளின என்ற கருத்து எத் துணையளவில் சரியானது என்றுய்ந்து, இரண்டின் பொருள் வேறு பாட்டினை விளக்கித் தமிழின் சிறப்பினையும் உணர்த்துவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாம். எடுத்த எடுப்பிலேயே இவ்விளக்கம் பெய்யறிவிய லடிப்படையி லமைந்தது என்று கூறி, ஆனால் மேலே யரின் முறையிலன்று, நந்தமிழருக்குக் கைவந்த கலையாய உவமங் கொண்டு விளக்கப் புகுந்தது என்றும் அறிமுகத்தான் கூறி வைக் கின்றேன் — தொடருக.

நம் கருத்துரை, உரைபடு பொருளின் இயல்பொடு, உள்ள நிலை யொடு ஒத்திருக்குமெனின் நம் உரை உண்மையதென்று மெய்யறி வியல் வகுக்கும். சாலையோரத்தே ஒருவன் கிடக்கின்றுன் என்று கொண்டால், அவனைத் தொட்டாய்வதற்கு முன் ‘அவன் தூங்குகின் றுன் என்றும், ‘அவன் மயங்கிக் கிடக்கின்றுன்’ என்றும், அவன் நிலையிஃதெனக் கருதலாம். இவ்விரு சொல்லியங்களும் கிடந்திருப்ப வனின் நிலைபற்றிய நம் கருத்துரை! ஆனால் அவன் மயக்க நிலையில் இருப்பதாகக் கொண்டால் ‘அவன் தூங்குகிறுன்’ என்ற நம் கருத் துரை உண்மையன்று; ஏனென்றுல் மயங்கிக் கிடத்தல், தூங்கிக் கிடத்தலின் வேறுனதென்பதால்; அவன் மயங்கியிருந்தால் தூங்குவ தில்லை; தூங்கியிருந்தால் மயங்கியில்லை என்றுதுமன்றே? இவ்விரு கருத்துரைகளுள் ஒன்றுமட்டுமே அவனிருக்கும் நிலையுடன் ஒத்தியல வொண்ணும் என்பதை அறிந்திடுக; ஆக, இவ்விரு சொல்லியங் களுள் ஒன்றே உண்மையாகுமறிக! இங்கு உண்மை என்று நாம் உரைக்கையில் ஒரே ஒரு சொல்லியம் மட்டுமே அவனின் உண்மை நிலை யுடன் ஒத்திருக்கும் என்று குறிக்கின்றேம் – மீண்டும் உண்மை நிலை என் கையில் உள்ள நிலை என்ற பொருளில் அவன் இருக்கின்ற நிலையை—தூங்குகின்ற அல்லது மயங்கிய நிலையைக் குறிக்கவாம். அவன் மயங்கிக் கிடந்தால் ‘அவன் தூங்குகிறுன்’ என்ற நம் கருத் துரை தவறுனது; அவன் தூங்கிக் கிடந்தால் ‘அவன் மயங்கிக்கிடக் கிறுன்’ என்ற கருத்துரை தவறுனது! உள்ள நிலையுடன் ஒத்தியல் வதே உண்மை யென்றலின்—உள்ள நிலையை உள்ளவாறே கூறும் கருத்துரையே உண்மையான தென்றலின்–அவன் தூங்கிக்கொண்

டிருந்தால் 'அவன் தூங்குகிறுன்' என்பதும், அவன் மயங்கிக் கிடப்பின் 'அவன் மயங்கிக் கிடக்கிருன் என்பதுவும் உண்மையாகும்' இங்கு உண்மை யென்றது நம் கருத்துரை அவன்றன் உண்மை நிலையை—உள்ள நிலையைக் குறித்தது யென்பதினுலாம்.

ஆக உண்மையென்பதென்ன என்று இப்போது வரையறுப்போம். சாலையிலே கிடப்பவன் தூங்கிக்கொண்டிருந்தால்—நாம் இருந்தாலுஞ் சரி, இல்லாதிருப்பினும், இல்லாதிருந்திருப்பினுஞ் சரி அவன் நிலை தூக்க நிலையாகவே இருக்கும்! அவன் நிலை—அவன் இருக்கும் நிலை—அவன் உள்ள நிலை தூக்கநிலை; ஆனுல் இங்கு 'உண்மை' யென்று எதைக் கூறுவது? எதனையுமின்று! ஒருவன் எந்நிலையில் உள்ளான் என்று நாம் கணிக்க என்று முயலுகின்றுேமோ அங்கேதான் நாம் அவன்றன் நிலையை உள்ளபடியே அறிந்துரைக்கின்றுேமா இல்லையா என்பதைப் பொறுத்து 'உண்மை' பிறக்கும்! நம் கணிப்பிற்கும்—அவன்றன் நிலைக்குமுள்ள தொடர்பே உண்மையினை விளக்கும். ஆக, 'உண்மை' யென்பது, ஒன்றின்—ஒருவனின்—உள்ள நிலையைக் கூறும் நம் கருத்துரை எத்துணையளவு அதன்—அவனின்—உள்ள நிலையுடன் ஒத்திருக்கின்றது என்பதிலேயே அடங்கியுள்ளது எனலாம்' உண்மையென்பது, ஒன்றின் உள்ள நிலையும் அதுபற்றிய கருத்துரையும் ஒத்தியலுகையில் பிறப்பதால், உண்மை 'ஒற்றுமைத் தொடர்பே' என முடிக்கலாம்.

ஆனுல், பெரும்பான்மையர் எண்ணுவதுபோல உண்மையின் எதிர்மறை பொய்யன்று! உள்ள நிலையொடு நம் கருத்து ஒத்தியலவில்லையெனில் நாம் பொய்க்கிறுேம் என்ருகாது! கல்லைக் கடவுளென்று சொல்பவன்—கல்லின் தன்மையைக் கடவுளது என்று கருதுவதால்—அவன்றன் கருத்துப்படி கடவுட் தன்மையும் கற்றன்மையும் ஒன்றென்ருவதால் – அவன் கருத்துரை பொய்யோவெனின், அற்றன்று என்று உறுதியாகக் கூறலாம்!! அப்படியென்ருல் கல்லுங் கடவுளே எனல் ஒல்லுமோ, எனில் ஒல்லாது என முடிக்கலாம்; ஏனென்ருல் உண்மை யதுவன்ருதலின்! வியப்பிது என்ன, உண்மையுமன்று, பொய்மையுமன்று என்ருல் எவ்வகைத்தது அக்கருத்துரை எனத் துடியல்—விளக்குவம்!

உண்மை யல்லாதது பொய்யன்று—'தவறு' ஆகும்! தூங்குபவனின் உண்மை நிலையை மயங்கியுள்ளான் என்று குறித்தால் நம் கருத்துரை உண்மையன்று—பொய்யுமன்று; தவருனதாம்! உண்மையைச் சொல்ல, உள்ள நிலையைச் சொல்ல, உள்ளதை உள்ளபடியே

சொல்ல நாம் தவறிவிட்டோம் என்பதையே 'தவறு' குறித்திடுமாம்; இதுவே தவற்றின் உண்மைப் பொருள்.

உண்மையுந் தவறும் ஓரினத்தவெனின் 'பொய்'யின் இனச் சொல்லெது-'பொய்' என்பதென்ன என்ற கருத்துத் தொடர்ந்து எழுகின்றதன்றோ-விடைப்பம்!

நஞ்சுண்டென் நண்பன் இறந்துபட்டுக் கிடக்கின்றனன் எனக் கொள்வோம். நீவிர் அவன் கிடப்பதைக் கண்டு 'தூங்குகிறான். என்றோ 'மயங்கிக் கிடக்கின்றான்' என்றோ கொண்டிரேல் நீங்கள் தவறியவராவீர்-உண்மையை-என் நண்பன் உள்ள நிலையை உள்ள வாறே உணரத் தவறிவிட்டீர்; ஆனால் என்னிடம்-நண்பன் நஞ்சுண் டிறந்த உண்மையினைத் தெரிந்து கொண்டுள்ள என்னிடம்-நண்பன் படுத்துக்கிடப்பதேன் என்று நீர் கேட்டிரேல், நான் தூங்குகிறான் என்றோ, மயங்கிக் கிடக்கின்றான் என்றோ கூறினேனாயின் நான் தவறியவன் என்று கூறப்படுவேன்? இல்லை; நான் பொய்த்தவனா வேன்-நான் பொய்க்கின்றேன்-நான் கூறுவது பொய்யாம்! உள்ள நிலையை-உண்மையை அறிந்திருந்தும், உள்ளதை உள்ளவாறே-உண்மையை உண்மையாகவே உரையாததே பொய்யாகும்! ஆனால் நண்பன் 'இறந்துபட்டிருக்கின்றான்' என்று நான் எனக்குத் தெரிந்த உண்மையினை உங்கட்குக் கூறுகின்றேன் என்றால், நான் கூறுவது உண்மையா என்றாய முயலின் சிக்கலிலே சிக்குறுவோம்! ?

நண்பன் உள்ள நிலை இறந்திருத்தலாதலின், நண்பன் இறந் துள்ளான் என்ற கருத்துரையும் உண்மையாகும். அதே போல என் நண்பன் இறந்திருக்கின்றான் என்று நீங்கள் என்னிடமிருந்து கேட்டறிவதற்கு முன்பே முன்னியுணர்ந்து, என்னிடமிருந்து தெரிந்து கொண்டாலும் உங்களின் கருத்து உண்மையாகும். ஆனால் உண்மை தெரிந்துள்ள நான் அடுத்தவரிடம் பொய்யுரைக்க லாம்-எனக்குத் தெரிந்திருக்கும் நண்பன் இறந்துள்ளான் என்னும் உண்மையைக் கூறாது பொய்க்கலாம்; ஆனால் அது பொய்யே! இங்கு சிக்கல் என்னவென்றால் நான் நண்பன் இறந்துபட்டிருக்கின்றான் என்று உண்மையை உள்ளவாறே உரைப்பதாகக் கொண்டால்-அஃது என்ன? உண்மையா-இல்லையென்கிறேன் நான்; ஏனென்றும் விளக்குதும்.

உண்மையென்பதென்னவென்று மீண்டுமொரு முறை நினை வுறுத்திக்கொண்டு தொடருவோம்; ஒரு பொருளின் உள்ள தன்மை

யொடு நம் கருத்துரை ஒத்திருத்தலே உண்மை-நம் கருத்துரை அப் பொருளின் உள்ள நிலையைச் சுட்டிக் கூறவேண்டும். கூறுதொழி யின் நம் கருத்துரை தவறென்ருகிடும்! ஒரு மரக்கட்டை கல்வடிவில்-தோற்றத்தில் கல்லைப்போன்றே கிடப்பதாகக் கொள்வோம். நான், அது கல்லா, மரக்கட்டையா என்று தெரியாமையால் அறிந்து கொள்வான் வேண்டி அதை எடுத்து வேருெரு கல்லின்மேல் வீசி யெறிந்ததன் வழி அது வெறும் மரக்கட்டையே என்றறிய வருகின் றேன் என்றுங் கொண்டால்-நான் இப்போது 'அது மரக்கட்டை' என்றுரைப்பின் எனது கருத்துரை அப்பொருளின் உள்ள நிலையைக் குறிப்பதால் எனது கருத்துரை உண்மையாகும்! நீங்கள் வழியில் வரு கின்றீர்கள். நீங்களாக அதையெடுத்து ஆய்ந்து கண்டுபிடிப்பதற்குப் பகரமாய் என்னிடம் 'அது கல்லா' என்று கேட்பதாகக் கொள்வோம். மாந்தன் முன்னேறுவதே இப்படித்தான்; ஒவ்வொருவனும் ஒன் றையே திரும்பத் திரும்ப ஆய்ந்து கொண்டிராது முந்தையவன் ஆய்ந்து கண்ட முடிவுகளைத் தான் எடுத்துக்கொண்டு தொடர்ந்து ஆய்கின்ருன்-இதைத்தான் பிறவுயிரிகளிடம் நாம் காண முடிவ தில்லை; ஏனென்ருல் ஒரு விலங்கு தான் கண்டதை-உணர்ந்ததை அடுத்த இனத்திற்கு-தன் குலத்திற்கு-தன் வழிமுறையினருக்குக் கூறிட முடிவதில்லை-ஏனென்ருல் மொழியில்லை! மாந்தனுக்கு மொழி இருப்பதனுலேயே முன்னேறிக் கொணடிருக்கிருன்! இனிக் கருத்திற்கு வர....

நான், 'அது கல்லே' எனக் கூறி வைத்தால் என் உரை பொய் யாகும்; ஆனுல் நான் ஏன் பொய்க்க வேண்டும்? ஆதலின் நான் 'அது கல்லன்று, மரக்கட்டையே' என்றுரைத்தால் நான் எனக்குத் தெரிந்துள்ள 'உண்மை'யினைக் கூறுகின்றே னன்ருே? நான் அது மரக்கட்டைதானென்று கருத்துரைப்பின் அது மரக்கட்டையின் உண்மைத் தன்மையை-அதன் உள்ளத் தன்மையினைக் கூறு கின்றது என்ருலும் என் உள்ளத்திலுள்ள நான் உணர்ந்துள்ளதை-உண்மையென்றுணர்ந்ததை-என் உள்ளக் கருத்தையே கூறினேன், அறிக! இங்கு நான் கூறும் 'மரக்கட்டையே' என்ற கருத்துரை நம் முன் கிடக்கும் மரக்கட்டையின் இயல்பொடு ஒத்திருத்தலின் அஃதுண்மையெனினும்-அது மரக் கட்டையே என்ற கருத்துரை என் உள்ளத்தில் நான் அது மரக்கட்டைதான் என்ற உண்மையினை அறிந்தவனுக, நம்பவனுகக் கூறுகின்றேனுதலின் அது வெறுமனே

உண்மையன்று-உள்ளத்தையே உங்கட்குத் திறந்து காட்டுவதாத லின் அஃது உண்மையினும் ஒருபடி உயர்ந்ததேயாம்! ஏனென்றால் அது மரக்கட்டைதான் என்று நான் ஆய்ந்திருந்தபோது என் கருத் துரை அப்பொருளின் இயல்பை மட்டும் குறித்தது-கொண்டிருந்தது; ஆனால் உங்களிடம் அதே 'மரக்கட்டைதான்' என்றுரைக்கையில் நான் மரக்கட்டைதான் என்று நம்புங் கருத்தும்-என் நம்பிக்கை மரக்கட்டையின் உண்மை இயல்புடன் ஒத்திருத்தலும் ஆக முத லுண்மையினும் இரண்டாமுண்மை உயர்ந்து விளங்குகின்றது! இக் கருத்தை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும்-ஏன் மேலைய மெய்யறி வியலரும் விளங்கிக் கொள்ளத் தவிப்பர்-ஏனென்றால் அன்னார் மொழிகளில் 'உண்மை' என்று ஒரே ஒரு சொல்லே உண்டு, (ஆங்: Truth; இலத்: Veritas; கிரே: Aletheia).

ஆக முதற் கருத்தை உண்மையென்றும், உண்மையென்று நான் நம்பி என் உள்ளக் கருத்தை உங்கட்குரைக்கையில் அதை 'வாய்மை' என்றும் கொள்க! ஆக உண்மை-தவறு என்பதோரின மாக, வாய்மை-பொய்ம்மை என்பது மற்றோரினமாக ஒரே கருத்தை யெனினும் சிறு, ஆனால் நுணுக்கமான வேறுபாட்டை விளக்குவதாக அமைகின்றதென்றிக.

எடுத்துக் காட்டுகள்: தொலைவில் தென்படும் மரம் தென்னை யென்று கொள்வோம். ஆனால்,

'அது பாக்குமரம்' என்று நான் கூறினால் என் கருத்துரை- 'தவறு';

'அது தென்னை' என்று நான் கூறினால் என் கருத்துரை- 'உண்மை'.

நான் உம் தூவலைத் திருடிக்கொண்டேன் என்றால்...

நான் உம் தூவலை எடுத்துத் திருட்டு என்றுணரின் அஃது- 'உண்மை'.

நான் உம் தூவலை எடுத்தது திருட்டன்று என்றுணரின் அது- 'தவறு'.

நான் செய்தது திருட்டென்ற உண்மை தெரிந்திருந்தும் உம் மிடம் 'திருடவில்லை' என்றல்-'பொய்';

நான் செய்தது திருட்டென்றுணர்ந்து உம்மிடம் திருடினேன் என்றுரைத்தல்-'வாய்மை'.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
உருவாக்க வெளியீட்டுத் திட்டம்.

அறிக்கை—I.

சென்ற இதழில் வெளியிட்டிருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக்க வெளியீட்டுத் திட்டத்தைக் கண்ணுற்ற தமிழன்பர் பலர் நேரிலும் மடல் வழியாகவும் தம்தம் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் எனக்குத் தெரிவித்தனர். சிலர் முணுமுணுத்த தாகக் கேள்விப்பட்டேன். இன்னுஞ் சிலர் முரணிப் பேசியதாகவும் அறிந்தேன். ஒரிருவர், "அரசு செய்ய விருந்ததை இவன் ஏதோ பெரிய இவன் போல் முந்திரிக்கொட்டைத் தனமாக முந்திக்கொண்டு செய்யத் திட்டம் வகுத்துவிட்டானே; செய்பட்டும் பார்க்கலாம்" என்று அரசுக்குப் பரிவும் என் மேல் எரிவும் காட்டிப் பேசினர் என்றும் தெரிய வந்தது. சில கீழ்களோ 'பாவாணர் பெயரால் இப்படியொரு பணம் பறிக்கும் திட்டம்' என்றும் பேசினராம்.

ஆனால் எத்தகையதொரு செயலுக்கும் இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகளும் வம்பளப்புகளும் இருக்கத்தான் செய்யும் என்பதும், மறைமுகமான பல எதிர்ப்புகளைக்கூடத் தாண்டியாக வேண்டும் என்பதும் எனக்குத் தெரியும். 'பொது வியக்கங்கள் அனைத்துமே போலித்தன யானவைதாம்; எனவே எதிலும் நாம் ஈடுபடுவதேயில்லை' என்று ஒதுங்கிப்போகும் சில வறண்ட உள்ளங்கள் கூட, சிலர் பலர் அமைத்த பொது வியக்கங்களால் ஏற்பட்ட விளைவுகளால்தாம் தம்மையறியாமல் நன்மை பெற்று வருகின்றன என்ற உண்மையை ஓரளவு உணர்ந்தவன் நான். எனவே வழக்கம்போல் பாராட்டுரை களில் மயங்கிவிடாமலும், புறம் பேசுதல்களால் தயங்கி விடாமலும், உட்பகைகளால் ஒடுங்கி விடாமலும் மேற்கொண்டு திட்டத்தைச் செயற்படுத்த முனைந்து நின்றேன்.

திட்டத்தை வெளிப்படுத்துமுன் பாவாணர் அவர்களிடம் கூறியிருந்த அளவுக்கு இரட்டிப்பாகவே உறுப்பினர்களைச் சேர்க்கத் திட்டமிட்டது, தமிழர்களைப் பற்றி ஓரளவு உணர்ந்திருந்த காணியத் தால்தான். இருநூற்றுவரைத் தேடினால் நூறு பேராகிலும் கிடைக்க

மாட்டார்களா என்று நான் கருதினேன். ஆனால் என்பால் நெருங்கியிருக்கும் அன்பர் சிலர் இருநூற்றுவர்தாம் சேர்க்கப் பெறுவர் என்பதையே எதிர்த்தனர். "ஆயிரம்பேர் கூட எளிதில் சேர்வார்கள்; அப்படியிருக்க இருநூற்றுவர் என ஏன் வரையறுத்தீர்கள்." என்று சிலர் சிணுங்கிக் கொள்ளவும் செய்தனர். ஓரிருவர் 'இவ்வளவு சேர்வது கடினந்தான்' என்றும் எச்சரித்தனர். அவர்கள் கூறியபடியே இறுதியில் திட்ட உறுப்பினர் இருநூற்றுவரில் இன்று (20—4—71) வரை நூற்று ஐம்பத்து இரண்டுபேரே சேர்ந்துள்ளனர். தென்மொழியைக் காலந்தாழ்த்து வெளியிடுவதற்கும் திட்ட உறுப்பினர்கள் இருநூற்றுவர் சேரட்டுமே என்று காத்திருந்ததும் ஒரு கரணியம். ஆனால் என் கணிப்புப்படி இக்கால் சேர்ந்துள்ள உறுப்பினர்களே ஐந்தாண்டுக் காலத்திற்கு நீடித்தால் போதும்.

இந்தத் திட்டம் கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் போல் பயன்பட்டது என்றால் வியப்பில்லை. ஆம், பாவாணர் அவர்கள்பால் மிகமிக நெருக்கமும் கவலையும். ஆர்வமும் அக்கறையும் கொண்ட—தாகக் காட்டிக்கொண்ட அன்பர்கள் பலர் – மிகப்பலர் இத்திட்டத்தில் சேரவில்லை. தனிப்பட்ட நிலையில் – தங்கட்கு எவ்வகைப் பயனும் ஏற்படப்போவதில்லை என்று கருதினார்களோ என்னவோ? அல்லது இத்திட்டம் நான் வெளியிட்ட திட்டம் என்பதால், இது வெற்றி பெற்று விடக்கூடாது என்று கருதியதாகவும் இருக்கலாம். அவ்வாறு கருதிய ஓரிருவர் பாவாணர்க்கு மட்டும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளவேண்டி, இத்திட்டத்தில் உறுப்பினராகாமலேயே அவர்க்குத் தொகை விடுத்து வருகின்றனர். எப்படியோ பாவாணர்க்கு உதவினால் சரி என்பதால் எனக்கும் அவர்களைப்பற்றி மகிழ்ச்சியே!

மற்றப்படி, இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள அன்பர்களைப் பற்றி ஓரளவு சொல்லிப்போகல் வேண்டும். திட்ட உறுப்பினர்களில் ஓரிருவரைத் தவிர எல்லாரும் தென்மொழி உறுப்—பினர்களும் அன்பர்களுமே என்பதில் தென்மொழித் தொடர்பான அனைவரும் மகிழ்ச்சியடையலாம். தென்மொழி படிப்பவர் தொகை ஏறத்தாழ ஐயாயிரம் இருக்கும் என்று மதிப்பிடப் பெறுகின்றது.

கொஞ்சம் கூடினும் கூடலாம். இந்த ஐயாயிரத்தில் நூற்றைம்பது பேர்தாம் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர் என்றால் மீதிப்பேரைப் பற்றி என்ன கருதுவது ?

பொதுவாகவே தென்மொழி படிக்கின்ற அன்பர்களைப்பற்றி எனக்கு நல்ல கருத்து உண்டு. அவர்கள் நடுநிலையானவர்கள்; எண்ணத் தெரிந்தவர்கள்; நேர்மையை நாடிச் செல்பவர்கள்; உண்மையும் ஊக்கமும் கொண்டவர்கள்; துன்பத்தில் துவளாதவர்கள்; இன்பத்தை எதிர்நோக்காதவர்கள்; உண்மைத் தமிழ் அன்பர்கள்; மொழி, இனம், நாட்டு விடுதலையை நோக்கி நடையிடுபவர்கள்; என்றெல்லாம் கருதிக் கொண்டிருக்கின்றேன். எனவே இத்திட்டத்தை வெளியிட்டவுடன் இதற்குக் கட்டாயம் ஓரளவு வெற்றி கிடைக்கும் என்று கருதினேன். நான் எதிர்பார்த்தபடியே என் மதிப்பீட்டில் முக்காற்பங்கு சரியாகப் போனது. தென்மொழி படிப்பவர் ஐயாயிரப்பேரில் நூற்றைம்பது பேர்தாம், அஃதாவது 3% விழுக் காட்டினர்தாம் செயலுக்குஉரியவர் என்பது வெளிப்படையாக மெய்ப் பிக்கப் பெற்றுவிட்டது. ஓரளவு நன்றாக விளைந்த விளைவிலேயே தேற்றம் இவ்வளவானால், நம் நாட்டில் உள்ள நான்கரைக் கோடித் தமிழர்களில் இருக்கும் மெய்த்தமிழ் அன்பர்களைக் கணக்கிட்டு அறிந்து கொள்க.

இனி, தென்மொழியில் வெளியிடப்பெற்ற திட்டம் வினைத்திறன் மிக்க எல்லாத் தமிழர்க்குமோ, பாவாணர் அறிவிலும் தொண்டிலும் நம்பிக்கை வைத்த அனைவர்க்குமோ தெரிந்திருக்க வழியில்லைதான். அவ்வாறு தெரிந்துகொள்ளும்படி அவர்களும் ஓரிடத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்களாகவும் இல்லை; இவ் வுலகெங்கணும் பரவலாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு நம் செய்தி எட்டும்படி செய்ய நாமும் விளம்பர வலிவுள்ளவர்களாகவும் இல்லை. இரண்டு மாதங்களுக்கு ஒரு தென்மொழியை வெளிக்கொணர்வதே மிகவும் அரிதாக விருக்கின்றது. எனவே தென்மொழித் திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னும், அவ்வப்பொழுது காணும் அல்லது கேட்கும் அன்பர்களில் சிலர் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள விளக்கம் கேட்டு எழுதி வருகின்றனர். திட்டம் நாம் குறிப்பிட்டபடி இருநூற்றுவர் திட்டவுறுப்பினர்களாகவும், ஐம்ப-தின்மர் அணிய உறுப்பினர்களாகவும் நிறைவுறும் வரை, அன்பர்கள்

கால வரையறையின்றிச் சேர்த்துக் கொள்ளப்பெறுவர். என்பதை மகிழ்வுடன் அறிவிக்கின்றேன். நமக்கு நோக்கந்தான் பெரியது; போக்கும், காலமும், முயற்சியும் நம் நிலைக்குத்தக்கபடி அவ்வப்பொழுது மாற்றியமைக்கப் பெறுவதால் கேடில்லை. ஆனால் ஒன்று, இனிமேல், அஃதாவது, திட்டத்தில் குறிப்பிட்ட உறுப்பினர் சேர்ப்புக் காலத்திற்குப்பின் எத்தனை மாதங்கள் கழித்து ஒருவர் உறுப்பினராகச் சேர விரும்புகின்றாரோ அத்தனை முன் மாதங்கட்கு உரிய தொகையையும் நடைமுறைமாதத் தொகையுடன் செலுத்துதல் வேண்டும். மாதங்கள் கூடுதலாக விருந்து, – ஒரே தொகுதியில் முன்மாதத் தொகை அவ்வளவையும் கட்ட வியலாமற் போகுமிடத்து அன்பர்கள் எனக்கெழுதிக் கலந்துகொள்ள வேண்டிக் கொள்கின்றேன்.

அன்பர் சிலர் நான்கைந்து மாதத்தொகையும், ஒருசிலர் ஓராண்டுத் தொகையும், ஓரிருவர் இரண்டாண்டு, மூவாண்டு, ஐந்தாண்டுத் தொகையுமோ செலுத்த முன்வந்துள்ளனர். இதனால் அவர்களுக்கும் நன்மை, எங்கட்கும் நன்மை. தனிப்பட்ட முறையில் அவர்கட்கு என் மனமுவந்த நன்றி! அவர்களைப் பின்பற்ற விரும்பு பவர்களும் அவ்வாறே நடந்து கொள்ளலாம். அன்பர் சிலர் குறிப்பிட்ட நாள் கடந்து,தொகை விடுக்கின்றனர் கூடியவரை மிகத் தாழ்த்தமின்றி விடுக்குமாறு அவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

என்னையறிந்த அன்பருள் சிலர் தங்களால் ஒவ்வொரு மாதமும் பப்பத்து உருபா ஒதுக்க முடியாமையால்தான் தாங்கள் இதில் சேரவில்லை என்று கூறினர். அவ்வாறு இயலாதவர்கள் இருவர் மூவராக, ஏன் ஐவராகச் சேர்ந்தோ கூட ஓர் உறுப்பாண்மை பெற லாம்; ஐவர் பெயரையும் பதிவில் குறிக்கப் பெறும்; ஆனால் ஒரு(வர்) முகவரியை மட்டுமே குறித்துக் கொள்ள முடியும்.

தென்மொழியில் முன்னர் குறிப்பிட்டபடி உறுப்பினர்களின் முழு முகவரிகளையும், பல காணியங்களால் வெளியிட முடியவில்லை; எனவே பெயரும் ஊரும் மட்டும் வெளிட்டுள்ளோம். அகரமுதலியில் முழு முகவரியும் வெளியிடப்பெறும்.

இறுதியாக, பாவாணர் அவர்கள் அகரமுதலிப் பணியைத் தொடங்கி விட்டார்கள் என்பதையும். அதன் ஓரிரு சொற்பகுதிகள் அடுத்து வரும் தென்மொழியிதழ்களில் போலிகையாக வெளியிடப் பெறும் என்பதையும் மெய்யன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

பிறபின்.

அன்பன்,

மேழம் எ. (20—4—71) — பெருஞ்சித்திரன்.

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்

உறுப்பினர் பட்டியல்.

திருவாளர்கள் :- (1) தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1. (2) மா. பூங்குன்றன், கடலூர்-1. (3) புலவர். இறைக்குருவன், மதுரை-10. (4) இறை. பொற்கொடி, மதுரை-10. (5) காளியப்பன் (நாராயணன்) நெய்வேலி-1. (6) செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. (7) த. வளங்கோ, புதுவை-1. (8) செ.சித்தார்த்தன், அறி. இ. [பி. எசி.] சென்னை-25. (9) கி. மகிழ்கோ, புதுவை-5. (10) பா. திருநாவுக்கரசு, பொ. இ., வேலூர்-9. (11) புலவர். சா. அடல் எழிலன், திருவையாறு. (12) நா. முத்துக்குமரன், அறி. இ. ஆ. ப., குளத்துப்பாளையம் (13) திருச்சிமாவட்டத்தான், பேட்டைவாய்த்தலை (14) ந. செங்குட்டுவன், திருச்சி-14. (15) அருண்மொழியன், திருச்சி-14. (16) வே நா. பொற்செழியன், (வே. நா. இரேணுகோபால்) பெங்களூர் 1. (17) உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10. (18) உளங்கவரழகன், இராசிபுரம். (19) நாவை-சிவம் (தமிழ்மகன்) கீரனூர். (20) ச. கலியமூர்த்தி, காவேரி நகர். (21) வே. மாறன், பெங்களூர்-21. (22) சி. பூ. மணி, பெங்களூர்-21. (23) கா. அப்பாத்துரை, நடுப்பட்டி. (24) ச. சின்னத்துரை. நெய்வேலி-1. (25) அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய்வேலி-1. (26) அ. அருள்நெறி, நெய்வேலி-2 (27) ஆ. கருப்பையா, நெய்வேலி-3 (28) இரா. அப்பாவு, நெய்வேலி-3. (29) இரா. பெருந்தேவன், நெய்வேலி-2. (30) மு. அறவாழி நெய்வேலி-3. (31) பொன்-தமிழ்மாறன் (இராமசாமி) நெய்வேலி-1. (32) தமிழ நம்பி, அறங்கண்டநல்லூர். (33) புலவர் பா. வீரப்பன், ஆனைமலை. (34) நா. இளமாறன் பெகும்பகல்லாக்குடியிருப்பு, (35) க. மலர்ச்செல்வன், (தனராசன்), மதுரை-1. (36) பா். பொ. இளங்கோ, உக்கரம். (37) செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. (38) சே கு. அரசங்கோவன், மேட்டூர் அணை-1. (39) ஞா. தாமசு, மணிமுத்தாறு. (40) கே. பூபதி, பெங்களூர்-16. (41) துரை - சம்பத்குமார், க இ. ஈரோடு-1 (42) அறவாழி, தளவாய்ப்பட்டணம். (43) இல. க. இரத்தினவேல், திருச்சிராப்பள்ளி-1. (44) சு. திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. (45) கே.ஏ.மணவாளன், பெங்களூர்-5.

(46) இர. பரணன், பரணம். (47) மு. வ. பரமசிவம், நடுப்பட்டி (48) ம. சோசு, உத்தமபாளையம். (49) மு திருநாவுக்கரசு, அண்ணாமலை நகர். 50 க. இராமசாமி, கோவில்பட்டி. 51. ஒ.பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல-வேலரங்கன். சோமையனூர். 53. கெம்பீரம், பெங்களூர்-1. 54. செ. பெருமாள், கடத்தூர். 55. புலவர். வ. அரிகரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன். வேலூர் 1 57. பி. செகநாதன், பி.எசி. ஈரோடு 58. செ. இராசமணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59 வெ. கிழார், பெங்களூர்-21 60. சா. பொழிலன், நெய்வேலி-2. 61. கா. சே. சாத்தப் பிள்ளை, பி. எசி. பி. டி., ஆமூர் 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப் புளியம்பட்டி. 63 ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியப்பட்டி. 64. புலவர் ந. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7. 66. அ வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8. 67 சாலை - இளந்திரையன், எம் .ஏ. எம்: லிட், புதிய தில்லி-5. 68 செ. வெற்றிவேந்தன், [செயராசன்] இராசிபுரம். 69. முல்லை வாணன், சிங்கை. 70. ந இராசகோபாலன், தஞ்சாவூர்-1. 71. அகத்தி கிருட்டிணன் இ. அ, [வேளாண்], சோளிங்கபுரம் 72. ஏ. கே மணி, பி. இ எ, எ. எசு. I, பெங்களூர்-38. 73. வே. ஐயனபிள்ளை, வேம்பனூர். 74. வ கௌரிநாதன், திருச்சி-14. 75. எழிலரசன், திருச்சி-14. 76 பொன் - தங்கவேலன், பெங்களூர்-15. 77. எழிலரசு, [இராசாமணி] மதுரை-3. 78. பொன். மாறன். [இராமகிருட்டிணன்] மதுரை-3. 79. மறை. நித்தலின்பன். கோவை-12. 0. தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி. 81. புலவர் ச. தமிழ்வேலன், மீனாட்சிபுரம். 82. அ. இளங்கோ, பி. எசி. பி. டி, வெருமாம்பாளையம் 83 புலவர். த. மாணிக்கம், கூடலூர். 84. புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை. 85. பா. வளன்அரசு, க. மு. திருநெல்வேலி-2. 86. கரு. பேச்சிமுத்து' திருச்சி-14. 87. அ. சாமிக்கண்ணு, அரூர் 88. கே. அரசு, பெங்களூர்-22. 89. ந. சுப்பையா, அருமடல். 90. த. சுப்பிர மணியன், செட்டிகுளம். 91. த. வையாபுரி, ஆனைமலை 92. என். கே. எசு காதர், அம்பாலா. 93. இர. சு கிருட்டிணன், கீழ்த்தென்குலம். 94. அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த.சரவணத் தமிழன், திருவாரூர். 97. மா இறைவன், திருச்சி-14, 98. த. அன்பழகன், கடலூர்-1.

99. பெ. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100 பெ. அன்ன காமு, கெ கல்லுப்பட்டி

101. க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு. 102. வி. இராசமாணிக்கம்.எம்.ஏ. கோயமுத்தூர்-18. 103. மு.கதிரவன், நெமலி. 104. அ. கிருட்டிணசாமி, பெங்களூர்-21. 105. துரை-தெட்சிணமூர்த்தி. மேலைச்செம்மங்குடி. 106. க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம். 107. அரங்க-திருமாறன், புதூர், உரத்தநாடு, 108. க. அன்புமணி, திருச்சி-15. 109. கரு. நடவரசன், நெய்—வேலி-3. 110. இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி. 111. ப.துரையரசன், கைகாட்டிப்புதூர். 112. கோ நிலவழகன், க.மு.சென்னை-30. 113. க. சி. அகமுடை நம்பி, பி. இ.. மதுரை. 114. அ.வலங்கைப் பாண்டியன், மதுரை. 115. சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை. 116. பொன்.இராமானுசம், சுத்தமல்லி. 117. நெல்லை. சு.மணியன், திருச்சி-2. 118. முத்து-செல்வன், அலதூர், 119. ஆ. ப. தொல் காப்பியன், பொ.ஆலமரத்துப்பட்டி. 120.இரா.தங்கராசன், மாரம்பாடி. 121. ப. பெரியசாமி, விருதுநகர். 122. பழங்கரைவேள், பழங்-கரை. 123. இந்தியவான்படைத்தமிழன்பர்கள், 124. உ. த. க. பெங்களூர் நகரக்கிளை. 125. தென்னவன், கவுண்டன்பாளையம். 126. காரை-இறையடியான், காரைக்கால். 127. காரை, அலீம். காரைக்கால். 128 தே. நே. சித்திரச்செல்வி ஆரூர். 129. புலவர் இ.தேவநேயச்சித்திரன், கீ அ செங்கழுநீர்ப்பட்டு. 130. வே. மு. பொதிய வெற்பன், செங்கழுநீர்ப்பட்டு. 131. ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132. த. முத்துக்குமரன், க. இ., பாம்பூர். 133. ஆ.வேணுகோபால், பாண்டிச்சேரி. 134. இரா. செயராமன், நெய் வேலி-2. 135. திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி.அத்திப் பாக்கம், 136. தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி-1. 137. மு. இளம் பரிதி, உரத்தநாடு. 138. ப.இளம்வழுதி, உரத்தநாடு. 139. நா.இள முருகன் அ.றி. இ, ஆ. ப. நீடாமங்கலம். 140. பி.என். அப்பாசிக் கவுண்டர், காளிங்கராயன்புதூர். 141. சிங்கை. செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை. 142.இரா.தமிழ்வாணன், நாயனூர்பாளையம். 143. அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா. 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம். (தெ. ஆ.) 145. ப. தாயம்மாள் அறவாணன், சென்னை-29. 146. ச. பாண்டியன், ஈப்போ. மலேசியா. 147. பெ. புதுமைப்பிரியன், மலாக்கா. 148. புலவர், ஞா. நன்முல்லை, விரியூர். (தெ. ஆ.) 149. இரா. வெற்றியரசு, நெய்வேலி—1. 150. ப. நன்முல்லை, சிங்கை. 151. இரா. அருட்குவை, நெய்வேலி-3, 152. அ. குமணன், சிங்கை. 0

'தென்மொழி'க்கு நன்கொடை.

6-8-69 முதல் 23-8-69 முடிய, தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையால் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உரு.
திரு. சூ. நா. சக்திவேல், சூலூர்.	11—00
திரு. கோ. துரைசாமி (நாயுடு) அவர்கள், கோவை:	100—00
தலைக்கு ஓர் உருபா மேனி கொடுத்த புதுவைத் தீயணைப்பு நிலைய ஊழியர்கள்: திருவாளர்கள்: இராதா, ஆதிமூலம், கிருட்டிணமூர்த்தி, நாராயணன், கெயான் உலூர்துசாமி, கோவிந்தசாமி, இரா: கிருட்டிணமூர்த்தி, இராசேந்திரன், இராமச்சந்திரன், சிவப்பிரகாசம், சுந்தரமூர்த்தி, ஆ. கோபாலன், பரந்தாமன், கே. இராமச்சந்திரன், ந. மறவன், (15)	15—00
புதுவைத் தொழிலாளர் துறை ஆணையர் அலுவலக அன்பர்கள் த. வளங்கோ அவர்கள் வழி விடுத்தது:	11—00
திரு. திருமாறன், நெய்வேலி.	7—00
திரு அறவாழி, ,,	2—00
திரு. புனல்நாடன், ,,	1—00
திரு துரை-அருண்மொழி, ,,	3—00
திரு. கி. வெ. வீராசாமி, ,,	1—00
திரு. ஆ. ந. இராசன் ,,	2—00
இண்டன், வான்படை அன்பர், திரு. இரெக்சு	20—00
அவர் வழி, தலைக்கு 5 உருபா மேனி கொடுத்த அன்பர்கள்: திருவாளர்கள்: இரத்தினம், சச்சிதானந்தம், நடராசன், மணி, எட்வர்டு, துரையரசன், முத்தையன் (7)	35—00
திரு. கிருட்டிணன், - இண்டன்.	4—00
திருவாளர்கள். தியாகராசன், சு. ப. மாணிக்கம் குழந்தைசாமி, (தலைக்கு 3 உருபா)	9—00
திரு. கோ. மாணிக்கம். இண்டன்.	2 - 00
திருவாளர்கள்: நம்பி, அந்தோனி, துரைசாமி, துரை, சீனுவாசன், (தலைக்கு ஓர் உருபாமேனி)	5—00

யீட்டுத்திட்ட அறிக்கையினைத் தென்மொழியில் படித்துப்பெரிதும் மகிழ்ந்தேன். இத்திட்டத்தை வெளிப்படுத்தியமைக்கு இந்நீரும் நிலனும் நினைந்திருந்து நன்றிசெலுத்தும். இதுவரை நீங்கள் இக்குமுகாயத்திற்கும், மொழிக்கும்செய்து வந்துள்ள தொண்டெல்லாம் மறக்கவும், மறைக்கவும் படினும் இத்திட்டம் ஒன்றே. தங்களை இத்தமிழ் நிலத்தின் தனிப்பெரும் தலைவராக அமர்த்தும் என்பது வெள்ளிடைமலை. நடுவை – மு. பரமசிவம், நடுப்பட்டி.

0: 239: தென்மொழி 8, ஓலை8-9 கண்டேன். மொழி மூதறிஞர் தந்தை பாவாணரும் தாங்களும் உள்ள இந்தத் தலைமுறையிலேயே அதுவும் இப்பொழுதேயே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியை உருவாக்கி விட வேண்டுமே என்று நீண்ட நாட்களாக உண்மைத் தமிழ் உணர்வுடன் துடித்துக் கொண்டிருந்த எனக்கும், என்போன்றார்க்கும் மாயா மகிழ்வூட்டும் திட்டம் ஒன்று செயல்வடிவம் பெறப்போகிறது என்பதற்கான அமைப்பு நெறிமுறை அதில் இருத்தல் கண்டு எல்லையில்லாப் பேரின்பப் பேராழியில் மூழ்கினேன். அறிக்கையைப் படித்தவுடனேயே ஏதோ பெறுதற்கரிய பெருஞ் செல்வத்தைப் பெற்றுவிட்டாற் போன்ற பூரிப்பும் பெருமையும் அடைந்தேன். கால வெள்ளத்தால் அழிக்க முடியாப்பெரும் வலிவையும் புகழையும் தமிழுக்கும் தமிழர்க்கும், தமிழ்நாட்டிற்கும் உண்டாக்கித் தருகின்ற இவ்வரிய பெரிய வினையைச் செய்ய முனைந்தபின் எக்கரணியத்திற்காகவும் சாம்பிவிடாமலும், தள்ளிப்போடாமலும் ஒரே குறியில் உறுதியாய் நின்று, மிகவிரைந்து பாவாணர்க்குத் துணை நின்று பேரகர முதலியை உருவாக்குங்கள். இதற்கு அரண் செய்யத் துடிப்புமிக்க உண்மைத் தமிழ் உணர்வாளர்கள் நீங்கள் எண்ணிப்பார்க்க முடியா அளவில் வீறுகொண்டு திரளப்போகிறார்கள் என்பது மலையினும் மாண உறுதி. இதனைத் தடுத்து நிறுத்திவிட எந்த வல்லாண்மையாலும் முடியாதாகையால் துணிந்து தமிழ் வரலாற்றைப் புதுக்குங்கள். அவ்வரலாற்றில் தனி முத்திரை பெறப் போகும் பாவாணரும், தாங்களும் இன்றுள்ள ஏழுகோடித் தமிழ் நெஞ்சங்களின் நன்றிக்கும் வாழ்த்திற்கும் அல்லாது இனிவரவிருக்கின்ற பல்கோடித் தமிழ்ப்பரம்பரையினரின் நன்றிக்கும் மதிப்பிற்கும் உரியவர்கள் ஆவீர்கள் என்பது உறுதி !

வெல்க தமிழ் ! விளைக செ. சொ. பி பேரகர முதலி !!

— நாவை. சிவம் – கீரனூர்.

0: 240; உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த "பாவாணரின் பேரகர முதலித் திட்ட" அறிவிப்பைத் தென்மொழியிற் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். மன்றப் பொதுக்குழு உடனே கூடி, பணமனுப்புதல் தொடர்பாகக் கீழ்க் காணுமாறு முடிவு செய்துள்ளது. எம்மன்றத்தில் மாதந்தோறும் பப்பத்து உருபா மேனி நன்கொடை நல்கும் அளவுக்கு ஏந்துடையோர் மிகச் சிலரே உளர். அவர்களிடம் தனித்தனியே உறுதி மொழி வாங்கி 20-ஆம் பக்கலுக்குள் தங்களுக்கு அனுப்பி வைக்கப் பெறும். பண ஏந்துள்ள உண்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு நேரிலும் அஞ்சல் வழியும் செய்தியினை அறிவித்துள்ளோம். பாவாணரை எங்கள் ஊருக்கே அழைத்துவர மன்றத்தில் ஒதுக்கிய

(அடுத்த பக்கம் பார்க்க)

பணம் (வட்டிக்கு விட) உரு 4000/— உள்ளது. அதை இத்திட்டத்திற்கு உடனே அனுப்ப இயலும். ஆயின் அதற்கு நீங்கள் அரசு வைப்பகத்தில் குறைந்த வட்டியே பெறுவீர்கள். எனவே, நாங்களே அத்தொகையை ஐந்தாண்டுகள் வைத்திருந்து பெருக்கி முடிவில் குறைந்தது 10,000/— உருபா அளிக்கிறோம். மன்ற உறுப்பினர்கள் திங்கள்தோறும் நல்கும் குறைந்த அளவு நன்கொடையும் இதில் அடங்கும். ஐந்தாண்டுகள் கழித்து மன்றம் தரும் நன்கொடை பத்தாயிரத்திற்கு மேல் இருக்குமே தவிர ஓர் உருபாக் கூடக் குறை-யாது; இஃது உறுதி, உறுதி, உறுதி.—கா. இளமுருகன், செயலர், மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.

0: 241: தங்கள் பேரகரமுதலி உருவாக்க வெளியீட்டுத்திட்டம் கண்டு மிக மகிழ்ந்தேன். இது போன்றதொரு திட்டத்தைத் தங்களுக்கு அறிவித்துச் செயல்படுத்தத்திட்டமிட்டு இருந்தபோது தென்மொழி இச்சீரிய திட்டத்தைத் தாங்கி வந்தது. தங்களுக்குத் தமிழ் மக்களின் சார்பில் நன்றி. தாங்கள் மிகக்குறைந்த மதிப்-பீடாக இருநூறு உறுப்பினர்களை எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளீர்கள். நான் காயிரவரை எதிர்பார்க்கிறேன். அவ்வாறு தாங்கள் மதிப்பிட்ட 200பேருக்குமேல் திட்டத்தில் சேர்ந்துகொள்ள முன்வந்தால் அவர்கள் ஆர்வத்தை வீணாக்கவேண்டா. அதனைக் கீழ்க்காணுமாறு பயன் படுத்தலாம் என்பது எனது கருத்து.

அறிவியல் துறையில் இன்று தமிழ் பின்தங்கிய நிலையில் ஆங்கிலத்துக்கு அடிமைப் பட்டுள்ளதை யாரும் மறுக்கமுடியாது. இந்நிலையில் அது மேலெழ வேண்டுமென்றால் ஆங்கிலத்தின் உதவி இன்றியமையாதது. ஆங்கில அறிவியல் நூற்களிலிருந்து மொழி பெயர்ப்பதன் மூலமும், கருத்துகளைப் பெறுவதன் வழியும்தான் தமிழில் அறிவியல் நூல்கள் விரைந்து பெருகமுடியும். ஆனால் ஆங்கிலத்தில் உள்ள பலசொற்களுக்கிணையான தமிழ்ச்சொற்கள் இன்று நடைமுறையில் இல்லை. அவற்றை வெளிக்கொணர்ந்து கட்டளை முறையில் (Authority) சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள் தனித்தனியே அம்முயற்சியில் ஈடுபட்டால் பெருங்குழப்பம் ஏற்பட்டு மொழிவளர்ச்சி குன்றுவதுடன் ஊக்கமும், நம்பிக்கையும் அற்று விடும். எனவே தகுதிவாய்ந்த பெரியாரான பாவணரின் மேற்பார் வையில் அவரால் இசைவளிக்கப்படும் தக்காரைக்கொண்டு பேரகர முதலித்திட்டத்திற்கு துணைத்திட்டங்களாக,

(1) ஆங்கிலத்தில் இருக்கும் மிகப்பெரிய அகரமுதலிக்கு 'ஆங்கில-தமிழ் அகரமுதலியும்" (2) பாவாணர் உருவாக்கும் அகர முதலிக்குத் "தமிழ் ஆங்கில அகரமுதலியும்" உருவாக்க வேண்டுகிறேன். பின்னது தமிழ் நூற்களைப் பிறமொழிகளுக்குப் பெயர்க்க முனைவோர்க்கு உறுதுணையாயிருக்கும். தாங்கள் தமிழ், தமிழ் மக்கள், தமிழ்நாடு இம்மூன்றின் வளர்ச்சியே என்று குறிப்பிட்டது கண்டு மகிழ்ந்து அதே நோக்குடைய நான் அச்சொற்களில் நம்பிக்கை கொண்டு அதேமுறையில் செயலாற்றுவீர்கள் என்ற உறுதியில் இதனைத் தங்கள்முன் வைக்கிறேன்.—செ.பெரியநாடார், நாகர்கோவில்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர் 1. தமிழ்நாடு.